

# மீன்வளம்

## மக்கள் சாசனம்

## 2014-2015

# தமிழ்நாடு அரசு
# மீன்வளத்துறை

## மக்கள் சாசனம் 2014 - 2015

## பொருளடக்கம்


| வ. எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் | 1 |
| 2. | தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் | 2 |
| 3. | கடலில் மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்குதல் | 2 |
| 4. | மீன்பிடிப்பு குறைந்த பருவ காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல் | 3 |
| 5. | மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம் | 3 |
| 6. | பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரம் வாங்க மானியம் வழங்குதல் | 4 |
| 7. | மீன்பிடி விசைப்படகுகளில் பயன்படுத்தப்படும் அதிவேக டீசல் எரியெண்ணெய்க்கான மத்திய கலால் வரித்தொகையினை திரும்ப அளித்தல் | 5 |
| 8. | மீனவர்களால் மீன்பிடிப்பிற்கு பயன்படுத்தப்படும் அதிகவேக டீசல் எரியெண்ணெய்க்கு விற்பனை வரி விலக்கு அளித்தல் | 6 |
| 9. | அண்டைநாடுகளில் சிறைவைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு தினஉதவி தொகை வழங்குதல் | 7 |
| 10. | கடலில் மீன்பிடிக்கையில் காணாமற் போகும் மீனவ குடும்பத்திற்கு தினஉதவித் தொகை வழங்கும் திட்டம் | 8 |
| 11. | இலங்கைக் கடற்படை தாக்குதலால் இறக்கும் / காயமடையும் மீனவரின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்குல் | 9 |
| 12. | ஆழ்கடல் சூரைமீன்பிடிப்பிற்கு ஏற்றவாறு புதிய மீன்பிடி விசைப்படகுகள் கட்டுவதற்கு 50% மானியம் வழங்குதல் | 10 |
| 13. | 10 மற்றும் +2 வகுப்பு மீனவ மாணவ மாணவியருக்கு ஊக்கப் பரிசுத் தொகை வழங்குதல் | 12 |

| | | |
|---|---|---|
| 14. | மீனவர்களுக்கு கைரேகை மற்றும் புகைப்படத்துடன் கூடிய உயிர் புள்ளியல் (Bio Metric) அடையாள அட்டை வழங்குதல் | 13 |
| 15. | இணையதளத்தின் வாயிலாக மீன்பிடிக்கலன்களை பதிவு செய்தல் மற்றும் மீன்பிடி உரிமம் வழங்குதல் | 13 |
| 16. | தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திர மயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு விற்பனை வரி நீக்கப்பட்ட மானிய விலையில் வணிக ரீதியிலான மண்ணெண்ணெய் வழங்குதல் | 14 |
| 17. | மீனவ இளைஞர்கள் கடல்சார் கல்வி பயில உதவித்தொகை வழங்குதல் | 15 |
| 18. | மூலதன நிதியின் மூலம் காணாமல் போன / துப்பாக்கி சூட்டில் இறந்த மீனவரின் குழந்தைகளின் உயர் கல்விக்கு நிதி உதவி வழங்குதல் | 16 |
| 19. | மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும் சலுகைகள் / உதவிகள் (மத்திய மாநில அரசுத் திட்டம்) | 17 |
| 20. | உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும் சலுகைகள் / உதவிகள் (மத்திய மாநில அரசு திட்டம்) | 21 |
| 21. | தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (NADP) | 22 |
| 22. | தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (உள்நாட்டு மீன்வளம் மற்றும் கடலோர மீன் வளர்ப்பு) | 24 |
| 23. | உள்நாட்டு மீன்பாசி குத்தகை மற்றும் மீன்பிடி உரிமம் | 28 |
| 24. | மீன்கள் மற்றும் இறால்களுக்கான நோய்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்துதல். | 28 |
| 25. | தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM) | 29 |
| 26. | தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள். | 31 |
| 27. | திட்டச் செயலாக்க அலுவலர்களின் முகவரி முற்றும் தொலைபேசி எண்கள் விவரம் (இணைப்பு அ) | 32 |
| 28. | தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்.றம் செவுள்வலை பயன்படுத்துவதற்கு ஏதுவாக புதிய மீன்பிடிக்கலன் கட்டுதல் வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் மானிய உதவி பெறுவதற்கான தகுதிகள் (இணைப்பு ஆ) | 41 |
| 29. | தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் (இணைப்பு இ) | 71 |

# தமிழ்நாடு அரசு
# மீன்வளத்துறை

## மக்கள் சாசனம் 2014 - 2015

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | **தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**<br>உறுப்பினர் மாதம் ஒன்றிற்கு ரூ. 100/– வீதம் 9 மாதங்களுக்கு ரூ.900/– மட்டும் செலுத்த வேண்டும். மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத் தொகையான (50:50) ரூ.1,800/– உடன் சேர்த்து ரூ.2,700/–ஐ மீன்பிடிப்பு குறைவாக உள்ள 3 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. | அ) பயனாளி 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்டும், கடல் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினராகவும், முழுநேர கடல் மீன்பிடித் தொழில் செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.<br>ஆ) மீனவர்/மீனவரின் குடும்ப உறுப்பினர் எவரும் மீன்பிடித் தொழிலைத்தவிர வேறு விதமான நிரந்தர வருமானம் ஈட்டக் கூடிய எந்தத் தொழிலிலும் ஈடுபட்டிருத்தல் கூடாது.<br>இ) விசைப்படகு/ கரையேற்றும் படகிற்கு உரிமையாளராக இருத்தல் கூடாது.<br>ஈ) மீனவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும். | 1) விண்ணப்பப் படிவம்.<br>2) மீனவர் உயிர் புள்ளியல் அடையாள அட்டை நகல். அடையாள அட்டை பெறவில்லை யெனில் அதற்கான விபரம் மற்றும் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கப் பட்ட விண்ணப்பத்தின் நகல்.<br>3) புகைப்படம் ஒட்டப்பட்ட வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்.<br>4) மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்று. | சம்பந்தப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர், மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 2. | **தமிழ் நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்** பயனாளி மாதம் ஒன்றிற்கு ரூ. 100/– வீதம் 9 மாதங்களுக்கு ரூ. 900/– மட்டும் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ், மீனவ மகளிரின் பங்கான ரூ.900/– உடன் மாநில அரசின் பங்கான ரூ.1,800/–ஐ சேர்த்து மீன்பிடிப்பு குறைவாக உள்ள 3 மாதங்களுக்கு, கடல் மீனவ மகளிருக்கு நிவாரணமாக ரூ.2,700/– வழங்கப்படுகிறது. | அ) பயனாளி 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்டும், கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினராகவும், முழுநேர கடல் மீன்பிடித் தொழில் மற்றும் அதைச் சார்ந்த தொழில் செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.<br>ஆ) மீனவ மகளிர் /மீனவ மகளிர் குடும்ப உறுப்பினர் எவரும் மீன் பிடித் தொழிலைத்தவிர வேறு விதமான வருமானம் ஈட்டக் கூடிய எந்தத் தொழிலிலும் ஈடுபட்டிருத்தல் கூடாது.<br>இ) விசைப்படகு/ கரை யேற்றும் படகிற்கு உரிமையாளராக இருத்தல் கூடாது. | 1) விண்ணப்பப் படிவம்<br>2) புகைப்படம் ஒட்டப்பட்ட வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்.<br>3) மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்று. | சம்பந்தப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர், மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம். இணைப்பு அ–வில் உள்ளன. |
| 3. | **கடலில் மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்குதல்** கடலில் மீன் இனப்பெருக்க காலத்தைக் கருத்தில் கொண்டும், கடல் வளத்தினைப் பாதுகாக்கும் பொருட்டும், ஒரே சீரான மீன்பிடிப்பு தடை ஒவ்வொரு ஆண்டும் 45 நாட்களுக்கு பின்வருமாறு அமல்படுத்தப்பட்டு வருகிறது. | அ) பயனாளி குடும்ப அட்டை பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.<br>ஆ) மீன்பிடி படகு பணியாளராக இருப்பின் படகு உரிமையாளரிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும்.<br>இ) முழுநேர கடல் மீன்பிடிப்பில் ஈடுபடுபவராக இருத்தல் வேண்டும்.<br>ஈ) பயனாளி மீன்பிடித்தொழிலை | 1) விண்ணப்பப் படிவம்<br>2) குடும்ப அட்டை நகல்<br>3) மீனவர் உயிர் புள்ளியல் அடையாள அட்டை நகல். அடையாள அட்டை பெற வில்லையெனில் அதற்கான விபரம் மற்றும் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகல்.<br>4) புகைப்படம் ஒட்டப்பட்ட | சம்பந்தப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர், மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | **கிழக்கு கடற்கரைப் பகுதி :** ஏப்ரல் 15 முதல் மே 29 முடிய **மேற்குக் கடற்கரை பகுதி :** ஜூன் 15 முதல் ஜூலை 29 முடிய இக்காலக்கட்டத்தில், கடல் மீனவர் குடும்பம் ஒன்றிற்கு நிவாரணமாக ரூ.2,000/– வழங்கப்படுகிறது. | தவிர வேறு நிரந்தர வருமானம் ஈட்டும் தொழிலில் ஈடுபட்டிருத்தல் கூடாது. | வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்.<br>5) படகு உரிமையாளரிடமிருந்து பணியாற்றியதற்கான சான்று.<br>6) மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் சான்று. | |
| 4. | **மீன்பிடிப்பு குறைந்த பருவ காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல்.** மீன்பிடிப்பு குறைந்த பருவ காலத்தில் மீனவ குடும்பம் ஒன்றுக்கு சிறப்பு நிவாரணமாக ரூ.4,000/– வழங்கப்படுகிறது. | அ) கடல் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் அல்லது தமிழ்நாடு மீனவர் நலவாரியம் ஆகியவற்றில் உறுப்பினர்களாக இருந்து முழுநேர மீன்பிடிப்பு அல்லது மீன்பிடிப்பு சார்ந்த தொழிலில் ஈடுபட வேண்டும்.<br>ஆ) கடல் மீனவ குடும்ப தலைவர்/ தலைவி குடும்ப அட்டை பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.<br>இ) மீனவர்/ பயனாளி எவரும் மீன்பிடித் தொழிலைத்தவிர வேறு விதமான நிரந்தர வருமானம் ஈட்டக் கூடிய எந்தத் தொழிலிலும் ஈடுபட்டிருத்தல் கூடாது. | 1) விண்ணப்பப் படிவம்<br>2) குடும்ப அட்டை நகல்<br>3) மீனவர் உயிர் புள்ளியல் அடையாள அட்டை நகல். அடையாள அட்டைபெற வில்லையெனில் அதற்கான விபரம் மற்றும் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்கப் பட்ட விண்ணப்பத் தின் நகல்.<br>4) மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்று / மீனவர் நல வாரிய உறுப்பினர் அட்டை நகல்.<br>5) புகைப்படம் ஒட்டப்பட்ட வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல். | சம்பந்தப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர், மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம். இணைப்பு அ–வில் உள்ளன. |
| 5. | **மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்** இத்திட்டத்தின் கீழ் மீன்பிடிப்பு மேற்கொள்ளும்போது விபத்தினால் மரணமடையும்/ முழு ஊனமடையும் / காணாமல் போகும் | அ) மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். 18 முதல் 70 வயதிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும். | 1) படிவம் I,II,III (சம்மந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பெறலாம்). | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | மீனவரின் குடும்பத்திற்கு நிவாரண தொகையாக ரூ.1,00,000/–ம், பகுதி ஊனமடையும் மீனவருக்கு நிவாரணத் தொகையாக ரூ. 50,000/–மும் வழங்கப்படுகிறது. ஒரு மீனவருக்கான ஆண்டு காப்புறுதி சந்தாத் தொகையான ரூ.30/–ஐ மத்திய மற்றும் மாநில அரசுகள் சமமாக செலுத்துகிறது. பயனாளி சந்தா தொகை செலுத்த தேவையில்லை. | ஆ) முழுநேர மீன்பிடித்தொழில் / மீன்பிடி சார்ந்த தொழில் செய்பவராக இருத்தல் வேண்டும்.<br>இ) உள்நாட்டு மீனவர் / மீனவ மகளிரும், மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக உள்ள மீன்பிடி தொழில் சார்ந்த பணியில் உள்ள மீனவர்களும் இத்திட்டத்தில் பயனடையலாம். | 2) முதல் தகவல் அறிக்கை<br>3) பிரேத பரிசோதனை அறிக்கை<br>4) இரசாயன பகுப் பாய்வின் அறிக்கை.<br>5) மீனவர் கூட்டுறவு சங்க பிரவேச புத்தகம் நகல்.<br>6) மீனவர் கூட்டுறவு சங்க தீர்மானம்.<br>7) இறப்பு சான்று<br>8) வாரிசு சான்று<br>9) பிற வாரிசுதாரர் களினால் அங்கீ கரிக்கப்பட்ட தடை யில்லா சான்று.<br>10) வாரிசுதாரரின் வாக்குமூலம்.<br>11) ஓட்டுநர் உரிமச் சான்று.<br>12) ஊனமுற்றமைக் கான சான்று.<br>13) உடனிருந்தோர் வாக்குமூலம். | |
| 6. | **பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரம் வாங்க மானியம் வழங்குதல்**<br><br>வெளிப் பொருத்தும்/ உட்பொருத்தும் இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30,000/– மானியமாக வழங்கப்படும். | அ) மீனவர்கள் தங்கள் மீன்பிடிக்கலன்களை மீன்துறையில் பதிவு செய்து, செல்லத்தக்க மீன்பிடி உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>ஆ) மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>இ) ஏற்கனவே இதே நோக்கத்திற்கு மானியம் பெற்றிருந்தால் மீண்டும் மானியம் பெற நான்கு ஆண்டுகள் இடைவெளி இருத்தல் வேண்டும். | 1) இயந்திரத்திற்கான விலையில் மானியம் நீங்கலாக மீதத் தொகைக்கான வரைவோலை.<br>2) படகு பதிவு புத்தகம்.<br>3) மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்று.<br>4) மீனவர் அடையாள அட்டை.<br>5) பதிவு செய்யப்பட்ட கலனின் புகைப்படம். | சம்பந்தப்பட்ட கடலோர மாவட்ட மீன் துறை உதவி இயக்குநர் மற்றும் மீன் துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்.<br><br>இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 7. | **மீன்பிடி விசைப் படகுகளில் பயன்படுத்தப்படும் அதிவேக டீசல் எரியெண்ணெய்க்கான மத்திய கலால்வரித் தொகையினை திரும்ப அளித்தல்**<br><br>வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மீன்பிடி படகு உரிமை யாளர்களுக்கு, மத்திய அரசின் கலால் வரி விலக்காக லிட்டர் ஒன்றிற்கு ரூ. 3/– வீதம், ஒரு மாதத்திற்கு ஒரு படகிற்கு 500 லிட்டர் அதிவேக எரியெண்ணெய்க்கு மானியம் வழங்கப்படும். | அ) பயனாளி 20 மீட்டர் நீளத்திற்கு குறைவான மீன்பிடி படகின் உரிமையாளராக இருத்தல் வேண்டும்.<br>ஆ) படகினை மீன்துறையில் பத்தாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு முன் பதிவு செய்து செல்லத்தக்க மீன்பிடிப்பு உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>இ) மீன்பிடிப்பு மற்றும் டீசல் உபயோகம் பற்றிய விவரங்கள் அதற்குரிய படகு இயக்கப் பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டும்.<br>ஈ) மீன்துறை அங்கீகரித்துள்ள டீசல் விற்பனை நிலையங்களில் டீசல் பெற்று மீன்பிடித் தொழிலுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.<br>உ) மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீன்பிடி விசைப்படகுகளுக்கு மட்டுமே டீசலுக்கான மத்திய கலால் வரி விலக்கு அளிக்கப்பட்ட எரியெண்ணெய் வழங்கப்படும்.<br>ஊ) படகு உரிமையாளர் வறுமை கோட்டிற்குகீழ் இருத்தல் வேண்டும். | 1) தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்கு முறைச் சட்டம் 1983–ன் கீழ் படகு பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் நகல்.<br>2) படகினை காப்புறுதி செய்த காப்புறுதி ஆவணத்தின் நகல்.<br>3) படகின் உரிமத்தினை புதுப்பித்த சான்றிதழின் நகல்.<br>4) வறுமை கோட்டுப் பட்டியல் எண்/ சான்று.<br>5) படகு இயக்க பதிவேடு | 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்ட விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 8. | **மீனவர்களால் மீன்பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படும் அதிவேக டீசல் எரியெண்ணெய்க்கு விற்பனைவரி விலக்கு அளித்தல்**<br>கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்படும் விசைப்படகிற்கு மீன்பிடித் தடைக்காலம் நீங்கலாக ஆண்டொன்றிற்கு 15,000 லிட்டர் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்கப்படுகிறது. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 3,600 லிட்டர் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய் வழங்கப்படுகிறது. | அ) படகு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம் 1983–ன் கீழ் பதிவு செய்யப்பட்டு செல்லத்தக்க மீன்பிடி உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். படகினை காப்புறுதி செய்திருக்க வேண்டும். மீன்பிடிப்பில் ஈடுபடும் படகாயிருத்தல் வேண்டும்.<br>ஆ) கடலோர மாவட்டங்களில் மீன்துறையால் அனுமதிக்கப்பட்ட தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம் / தமிழ்நாடு தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மற்றும் மீன்துறையால் அனுமதிக்கப்பட்ட தனியார் விற்பனை நிலையங்களில் விற்பனைவரி விலக்கு அளிக்கப்பட்ட அதிவேக எரியெண்ணெய் விநியோகிக்கப்படும்.<br>இ) மீன்பிடித் தொழிலுக்கு மட்டுமே டீசல் பயன்படுத்த வேண்டும்.<br>ஈ) படகுகளுக்கு அப்பகுதி அங்கீகரிக்கப்பட்ட (Authorised Officer) அலுவலரால் டீசல் விநியோக அட்டை வழங்கப்படும். மாதமொருமுறை படகின் பிரயாண பதிவேடு (Log Book) சம்பந்தப்பட்ட அலுவலரின் ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். | 1) தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம் 1983–ன் கீழ் படகு பதிவு செய்யப்பட்ட பதிவு சான்றிதழின் நகல்.<br>2) படகினை காப்புறுதி செய்த படிவத்தின் நகல்.<br>3) படகின் உரிமத்தினை புதுப்பித்த சான்றிதழின் நகல். | 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்ட விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 9. | **அண்டை நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்**<br>மீன்பிடிப்பின் போது பிறநாட்டினரால் கைது செய்யப்படும் மீனவரின் குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு கைதான மீனவர்கள் வீடு திரும்பும் வரைஅவர்களின் குடும்பத்திற்கு, நாளொன்றுக்கு ரூ.250/– வீதம் நிவாரணம், உதவி பெறுவதற்குரிய தகுதிகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் வழங்கப்படுகிறது (கைது செய்யப்படும் நாள் மற்றும் திரும்பும் நாள் நீங்கலாக). | அ) கடலில் மீன்பிடித் தொழில் செய்யும்பொழுது அண்டை நாட்டு அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படும் மீனவர், மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>ஆ) மீனவர் கைது செய்யப்பட்ட விவரம் அயல் நாட்டிலுள்ள இந்திய தூதரகத்தால் உறுதி செய்யப்பட வேண்டும்.<br>இ) கைது செய்யப்பட்ட மீனவர் சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டிருக்கக் கூடாது. | 1) மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்று.<br>2) அயல் நாட்டு தூதரக கைது உறுதி கடிதம்.<br>3) சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதற்கான சான்று.<br>4) மீனவர் அடையாள அட்டை நகல். | சம்பந்தப்பட்ட மாவட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 10. | **கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போகும் மீனவர் குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்கும் திட்டம்**<br>கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போகும் மீனவர் குடும்பத்திற்கு நாளொன்றுக்கு ரூ. 250/– அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ.7,500/– இரண்டு ஆண்டுகள் வரை (காப்புறுதி நிவாரண கருத்துரு அனுப்பும் வரை) வழங்கப்படுகிறது. | அ) பாதிக்கப்பட்ட மீனவர், மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>ஆ) விண்ணப்பத்துடன் உள்ளூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அதன்மீது உள்ளூர் மீன்துறை சார் ஆய்வாளரின் / மீன்துறை ஆய்வாளரின் மேலொப்பத்துடன் மீன்துறை உதவி இயக்குநருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>இ) மீனவர் காணாமல் சென்ற நாளிலிருந்து 30 நாட்கள் அவருடைய கிராமத்தில்/ கிராமங்களில் இல்லையெனவும், மீனவர் எந்தவிதமான சட்டவிரோத செயலிலும் ஈடுபடவில்லையெனவும் உள்ளூர் கிராம நிர்வாகிகளிடம் உறுதிமொழிக் கடிதம் பெற வேண்டும்.<br>ஈ) காணாமல் போன மீனவர் கண்டுபிடிக்கப்பட்டு, அவர் சட்டவிரோத செயலில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவந்தால், வழங்கப்பட்ட தின உதவித் தொகையினை அரசுக்கு திரும்ப செலுத்துவதாக சம்பந்தப்பட்ட மீனவரின் குடும்பத்தார்களிடமிருந்து பிணை முறி பத்திரம் பெற வேண்டும். | 1) மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்று.<br>2) காவல்துறையின் முதல் தகவல் அறிக்கை.<br>3) காணாமல் போன மீனவர் கிராமத்தில் 30 நாட்கள் இல்லை என்பதற்கான கிராம நிர்வாக அலுவலரின் சான்று.<br>4) காணாமல்போன மீனவர் திரும்ப கிடைக்கப் பெற்றால், பெறப்பட்ட தின உதவித் தொகைகளை திரும்ப செலுத்துவதற்கான மனுதாரரின் சம்மதம் தெரிவிக்கும் பிணைப்பத்திரம்.<br>5) காணாமல்போன மீனவர் எந்தவிதமான சட்ட விரோத செயலிலும் ஈடுபடவில்லை என்பதற்கான கிராம நிர்வாக அலுவலரின் சான்று.<br>6) மீனவர் அடையாள அட்டை நகல். | சம்பந்தப்பட்ட மாவட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரார் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | | உ) இத்தின உதவித் தொகை, மீனவர்கள், மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினராக இல்லாத பட்சத்தில், அவர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினராக பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து, அம்மீனவர்களுக்கு, நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் வழங்கப்படும். | | |
| 11. | **இலங்கை கடற்படை தாக்குதலால் இறக்கும்/ காயம் அடையும் மீனவரின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்குதல்** இலங்கை கடற்படை யினரால் துப்பாக்கிச் சூட்டில் இறக்க நேரிடும் மீனவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை ரூ.3.00 இலட்சம் வழங்கப்படுகிறது. இறந்த மீனவர், குடும்பத்தின் வருவாய் ஈட்டும் ஒரே நபராக இருப்பின் நிவாரணத் தொகை ரூ.5.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டின் போது சிறுகாயம் அடையும் மீனவருக்கு ரூ.20,000/– மும், படுகாயம் அடையும் மீனவருக்கு ரூ.50,000/– மும் வழங்கப்படுகிறது. | – | 1) காவல் துறையின் முதல் தகவல் அறிக்கை.<br>2) இறப்பு சான்று.<br>3) பிரேத பரிசோதனை சான்று / அறிக்கை.<br>4) வாரிசு சான்று.<br>5) பிறவாரிசுதாரர் களிடமிருந்து பெறப்பட்ட சம்மதக் கடிதம்.<br>6) துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றதற்கானச் சான்று | சம்பந்தப்பட்ட மாவட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 12 | **ஆழ்கடல் சூரை மீன்பிடிப்பிற்கு ஏற்றவாறு புதிய மீன்பிடி விசைப் படகுகள் கட்டுவதற்கு 50% மானியம் வழங்குதல்.**<br>தூண்டில் முறை மற்றும் செவுள் வலை மீன்பிடிப்பு மேற்கொள்ள புதிய படகுகள் கட்ட ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 50% மானியமாக அதிகபட்சம் ரூ.30 இலட்சம் வழங்கப்படும் | அ) பயனாளிகள் குழுவாக (அதிகபட்சம் 6 மீனவர்கள் வரை) அல்லது மீனவ கூட்டுறவு சங்கம் அல்லது தனியொரு மீனவராக இருக்கலாம்.<br>ஆ) ஒரு மீனவ குடும்பத்தில் ஒரு நபர் மட்டுமே தகுதியானவர் (குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் தனித்தனி குடும்ப அட்டை பெற்றிருக்க வேண்டும்)<br>இ) விண்ணப்பதாரர் தமிழகத்தைச் சேர்ந்த முழுநேர மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் 60 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். மீன்துறையால் வழங்கப்பட்ட உயிரி அடையாள அட்டையை பெற்றிருக்க வேண்டும். அல்லது அடையாள அட்டை பெற விண்ணப்பித்திருக்க வேண்டும். விண்ணப்பம் செய்ததற்கான சான்று மீன்துறை உதவி இயக்குநரால் அளிக்கப்பட வேண்டும். | 1) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்–ஐ<br>2) விண்ணப்பத்தில் ஒட்டப்படவேண்டிய புகைப்படங்களைத் தவிர்த்து, அண்மையில் எடுக்கப்பட்ட மூன்று வண்ண புகைப்படங்கள்.<br>3) இந்த திட்டத்தில் மானியம் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்ட மீன்பிடிக்கலனின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் (சான்று பெற்ற தகுதி வாய்ந்த/ அங்கீகரிக்கப்பட்ட கடற்படை கட்டட வரைவாளரால் சான்றொப்பம் செய்யப்பட வேண்டும். அசல் இணைக்கப்பட வேண்டும்).<br>4) ஆளறிச் சான்று மீனவர் உயிரி அடையாள அட்டையின் நகல்/ உயிரி அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகல். | சம்பந்தப்பட்ட மாவட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். திருநெல்வேலி மாவட்டம். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | | ஈ) தமிழகத்தைச் சார்ந்த மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>உ) தமிழ்நாடு அல்லது MPEDA வின் சூரை மீன் பிடிப்பிற்கு படகுகள் மாற்றுதல் திட்டத்தின்கீழ் மானிய உதவி பெறாதவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தற்போதுள்ள இழுவலை விசைப்படகு ஒப்புவிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>**விரிவான வழிமுறைகள் இணைப்பு ஆ– வில் வழங்கப்பட்டுள்ளன.**<br>**(பக்கம்–41ல் காண்க)** | 5) குடும்ப அட்டை நகல்.<br>6) மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்று.<br>7) வங்கி கணக்குப் புத்தகத்தின் நகல் (மானியத் தொகை இருப்பு வைப்பதற்கான வங்கி கணக்கு).<br>8) வங்கி கடன் பெறும் பட்சத்தில், வங்கியில் கடன் வழங்குவதற்கான ஒப்புதல் கடிதம் அல்லது விண்ணப்பதாரரால் இணைப்பு –9 ல் உள்ள படிவம் VI ல் வழங்கப்படும் உறுதி மொழி.<br>9) விண்ணப்ப தாரர்கள் குழுவாக இருப்பின் அங்கத்தினர்களின் தொழில் கூட்டு ஒப்பந்த பத்திரம் இணைக்கப்பட வேண்டும்.<br>பின்குறிப்பு: மேற்கண்ட ஆவணங்களின் நகல்கள் அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலரால் சான்றொப்பம் பெற வேண்டும். மீன்பிடி கலனின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்களின் அசல் விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். | |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 13 | **10 மற்றும் + 2 வகுப்பு மீனவ மாணவ, மாணவியருக்கு ஊக்க பரிசுத் தொகை வழங்குதல்** மீனவ சமுதாய மாணவ, மாணவியர்களின் படிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு 10ம் வகுப்பு மற்றும் 12–ம் வகுப்புகளில் உயர் மதிப்பெண்களை பெறுபவர்களுக்கு ஊக்கத் தொகையும் பாராட்டுச் சான்றும் 2005–06 ஆம் ஆண்டு முதல் வழங்கப் படுகிறது. ஊக்கத் தொகை 2010 –2011 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப் படுகிறது. | **+2 வகுப்பு மாணவ மாணவியருக்கு:**<br>அ) மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மீனவ மாணவ/ மாணவிக்கு தலா ரூ.10000/– ஊக்கத் தொகை வழங்கப்படும்.<br>ஆ) மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மீனவ மாணவ / மாணவிக்கு தலா ரூ.6000/– ஊக்கத் தொகை வழங்கப்படும்.<br>**10ம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு:**<br>அ) மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மீனவ மாணவ / மாணவிக்கு தலா ரூ.6000/– ஊக்கத்தொகை வழங்கப்படும்.<br>ஆ) மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மீனவ மாணவ / மாணவிக்கு ஊக்கத் தொகை தலா ரூ.2000/– இரண்டாம் மதிப்பெண் பெற்ற மாணவ / மாணவிக்கு தலா ரூ.1000/– மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெற்ற மாணவ / மாணவிக்கு தலா ரூ.600/– வழங்கப்பட்டு வருகிறது. ஊக்கப்பரிசு பெற்ற அனைத்து மீனவ மாணவ / மாணவியருக்கும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. | 1) சாதி சான்றிதழ் நகல்.<br>2) மதிப்பெண் பட்டியல் பள்ளி தலைமை ஆசிரியரால் சான்றொப்பம் இடப்பட்ட நகல்.<br>3) மாவட்ட கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட பட்டியல் விபரம்.<br>4) வங்கி கணக்கு விபரம் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்<br><br>இணைப்பு அ–வில் உள்ளன |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 14. | **மீனவர்களுக்கு கைரேகை மற்றும் புகைப்படத்துடன் கூடிய உயிர் புள்ளியல் (Bio Metric) அடையாள அட்டை வழங்குதல்**<br>கடலோர பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு கடலோரக் கிராமங்களில் வசிக்கும் முழுநேர கடல் மீனவர்களுக்கு கைரேகை பதியப்பட்ட புகைப்படத்துடன் கூடிய உயிர் புள்ளியல் அடையாளஅட்டைகள் வழங்குதல். | இந்த அடையாள அட்டைகள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள கடல் மீனவர்களுக்கு வழங்கப்படும். | 1) உரிய விண்ணப்பப் படிவம்.<br>2) உரிமையாளர் தொடர்புடைய குடும்ப அட்டை / வாக்காளர் அடையாள அட்டை.<br>3) மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் சான்று.<br>4) மீன்வளத்துறையால் ஏற்கெனவே வழங்கப்பட்ட அடையாள அட்டை. | 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்ட விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள். இணைப்பு அ–வில் உள்ளன. |
| 15. | **இணையதளத்தின் வாயிலாக மீன்பிடிக் கலன்களை பதிவு செய்தல் மற்றும் மீன்பிடி உரிமம் வழங்குதல்**<br>கடலோர பாதுகாப்பினை கருத்தில்கொண்டு இணையதளத்தின் வாயிலாக மீன்பிடிக் கலன்களை பதிவு செய்தல். | **மீன்பிடிக் கலன்களை பதிவு செய்வதற்கு :**<br>அ) மீனவர் சம்மந்தப்பட்ட அங்கீகாரம் பெற்ற அலுவலரின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.<br>ஆ) சம்மந்தப்பட்ட மீன்பிடி படகினை அங்கீகாரம் பெற்ற அலுவலரின் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.<br>இ) மீன்பிடிக் கலன் கடலில் மீன்பிடிப்பதற்கு பயன்படுத்துவதற்கான தகுதி மற்றும் பாதுகாப்பு அம்சங்களை உடையதாக இருத்தல் வேண்டும்.<br>ஈ) தமிழ்நாடு கடல் மீன்பிடி | 1) உரிய விண்ணப்பப் படிவம்<br>2) மீன்பிடிக் கலன் உரிமையாளருடைய புகைப்படம் / மீன்பிடிக் கலனின் புகைப்படம்<br>3) வங்கிக் கடன் பெற்றதற்கான ஆவணங்கள்<br>4) மீன்பிடிப் படகுக்கூடு கட்டியது / வாங்கியது குறித்த ஆவணங்கள்<br>5) இயந்திரம் வாங்கியதற்கான ஆவணங்கள்<br>6) உரிமையாளர் தொடர்புடைய குடும்ப அட்டை / வாக்காளர் அடையாளஅட்டை<br>7) மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் சான்று. | 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்கு முறைச்சட்ட விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரார் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | | ஒழுங்குமுறைச் சட்டம் 1983 மற்றும் அதன் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள நீளம் மற்றும் குதிரைத்திறன் உடைய மீன்பிடி கலனாக இருத்தல் வேண்டும் | | |
| 16. | **தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திர மயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு விற்பனை வரி நீக்கப்பட்ட மானிய விலையில் வணிக ரீதியிலான மண்ணெண்ணெய் வழங்குதல்**<br>தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங் களிலுள்ள மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திர மயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 3000 லிட்டர் விற்பனை வரி நீக்கப்பட்ட, மானிய விலையிலான வணிக ரீதியிலான மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. | அ) மண்ணெண்ணெ யினால் இயங்கும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகாக இருக்க வேண்டும்.<br>ஆ) இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம் 1983–ன் படி பதிவு செய்ததாக இருக்க வேண்டும். செல்லத்தக்க மீன்பிடி உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>இ) இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு மீன்பிடிப்பில் முழுமையாக ஈடுபட்டிருக்க வேண்டும்.<br>ஈ) படகு பழுதுநிலையில் இருக்கும் காலத்திற்கு மானிய விலையிலான மண்ணெண்ணெய் வழங்கப்பட மாட்டாது.<br>உ) விற்பனைவரி நீக்கப்பட்ட,மானிய விலையில் | 1) தமிழ் நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டம் 1983–ன்கீழ் பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் நகல்.<br>2) படகின் உரிமம் புதுப்பித்த நகல்.<br>3) மீனவர் அடையாள அட்டை நகல்.<br>4) மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்று. | மீன்துறை உதவி இயக்குநர் (மீன்பிடித் துறைமுக மேலாண்மை பிரிவு) தூத்துக்குடி, சின்னமுட்டம், மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) இராதாபுரம். திருநெல்வேலி மாவட்டம், குளச்சல், கன்னியாகுமரி மாவட்டம் இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | | மண்ணெண்ணெய் மீன்துறை ஆணையர் / இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் விற்பனை நிலையங்கள் மூலமே பெறப்பட வேண்டும். | | |
| 17. | **மீனவ இளைஞர்கள் கடல்சார் கல்வி பயில உதவித்தொகை வழங்குதல்**<br>அ) கடல்சார் கல்வி பயிலும் மீனவ இளைஞர்களுக்கு கீழ்க்கண்ட கடல்சார் கல்வி பயில உதவித்தொகை ரூ.50,000/– வழங்கப்படும்.<br>i) மாலுமியியல் தொடர்பான பட்டயப் படிப்பு.<br>ii) கடல் பொறியியல் தொடர்பான பட்டயப்படிப்பு.<br>iii) படகுதள உதவியாளர் (இளங்கலை மாலுமியியல் பட்டப்படிப்புக்கு முந்தைய ஓராண்டு கால படிப்பு.)<br>iv) பட்டயப்படிப்பு பொறியாளருக்கான இரண்டு வருட கடல் பொறியாளர் பயிற்சி படிப்பு<br>v) இளங்கலை பொறியாளருக்கான ஓராண்டு கடல் பொறியாளர் பயிற்சி படிப்பு<br>vi) மூன்று வருட மாலுமியியல் இளங்கலை படிப்பு | உதவித்தொகை பெறும் மாணவரின் பெற்றோர் / காப்பாளர், கடல் / உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும். | 1) மீனவர் நலவாரிய அடையாள அட்டை நகல் மற்றும் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் சான்று.<br>2) மாணவரின் தந்தை / பாதுகாவலர் மீனவர் என்பதற்கான அடையாள அட்டை நகல்<br>3) குடும்ப அட்டை நகல்<br>4) மாணவரின் அடையாள அட்டை நகல்<br>5) கல்லூரியில் சேர்ந்தமைக்கான சான்று<br>6) கல்வி நிறைவுச் சான்று (சான்றளிக்கப்பட்டது) | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | ஆ) உதவித் தொகை இரண்டு கட்டமாக வழங்கப்படும். 50 சதவீதம் பட்டயப்படிப்பில் சேர்ந்த உடனும், மீதி 50 சதவீதம் தொகை படிப்பினை முடித்த பின்பும் வழங்கப்படும். | | | |
| 18. | **மூலதன நிதியின் மூலம் காணாமல் போன / துப்பாக்கி சூட்டில் இறந்த மீனவரின் குழந்தைகளின் உயர் கல்விக்கு நிதி உதவி வழங்குதல்** | மீன்பிடிப்பின் போது காணாமற் போன / துப்பாக்கி சூட்டினால் இறந்த மீனவரின் குழந்தைகளின் உயர்கல்விக்கு நிதி உதவி வழங்குதல். ரூ.15,000/– மாநகராட்சிக்குட்பட்ட கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் ரூ.10,000/– மற்ற நகரங்களில் பயிலும் மாணவர்களுக்கு கீழ்காணும் உயர்கல்விக்காக நிதி உதவி வழங்கப்படுகிறது.<br>(i) இளங்கலை மருத்துவ படிப்பு (எம்.பி.பி.எஸ்), இளங்கலை பல்மருத்துவ படிப்பு ( பி.டி.எஸ்), பயோ மெடிக்கல் படிப்புகள்<br>(ii) பொறியியல் இளநிலை பட்டம்<br>(iii) மீன்வள அறிவியல், | 1) காவல்துறை முதல் தகவல் அறிக்கை.<br>2) துப்பாக்கிச் சூட்டில் இறந்ததற்கான சான்று. / மீனவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதற்கான சான்று.<br>3) இறப்புச் சான்று<br>4) வாரிசுரிமை சான்று.<br>5) கல்வி பயிலும் நிறுவனத்திடம் இருந்து கட்டணம் குறித்த சான்று/ ஆவணங்கள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | | கால்நடை அறிவியல், வேளாண் அறிவியல் மற்றும் துணை படிப்புகளில் இளநிலை பட்டம்.<br>(iv) செவிலியர் மற்றும் மருந்தியல் இளநிலை பட்டம்<br>(v) கல்வியியல் இளநிலை<br>(vi) கலை, அறிவியல், கணினி அறிவியல், வணிகவியல் மற்றும் இளநிலை பட்டம்<br>(vii) தொழில்நுட்ப அனைத்து பட்டய படிப்பு.<br>(viii) தமிழ்நாடு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற பட்டப்படிப்புகள். | | |
| 19. | **மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும் சலுகைகள் / உதவிகள் (மத்திய மாநில அரசுத் திட்டம்)**<br>**அ) புதிய குளங்கள் / குட்டைகள் அமைத்தல்**<br>ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பு குளம் அமைத்திட ரூ.3.00 இலட்சத்தில் 20 விழுக்காடு அல்லது அதிகபட்ச மானியத் தொகையாக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 60,000/– வழங்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட / பழங்குடியினத்தவர்க்கு 25 விழுக்காடு (அல்லது) அதிகபட்ச மானியமாக ரூ. 75000/– ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படுகிறது. | அ) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ஆ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று<br>3. பணிகள் நிறைவேற்றப் பட்டமைக்கான பட்டியல்கள்<br>4. புகைப்படம்<br>5. தாழ்த்தப்பட்ட / பழங்குடியினராயின் அதற்குரிய சான்றிதழ் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | **ஆ) குளங்கள்/ தொட்டிகளை சீரமைத்தல் / புதுப்பித்தல்**<br>ஒரு ஹெக்டேருக்கு ஆகும் செலவினத்தொகை ரூ. 75,000/– த்தில் 20 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.15,000/–மும் தாழ்த்தப்பட்ட / பழங்குடியினருக்கு 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.18,750/–ம் வழங்கப்படும். | அ) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ஆ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>இ) ஏற்கனவே மீன்பண்ணை வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும். | 1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று<br>3. பணிகள் நிறைவேற்றப் பட்டமைக்கான பட்டியல்கள்<br>4. புகைப்படம்<br>5. தாழ்த்தப்பட்ட/ பழங்குடி யினராயின் அதற்குரிய சான்றிதழ் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன. |
| | **இ) நன்னீர் மீன்வளர்ப்பு இடுபொருள் செலவினம்**<br>ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு ஆகும் செலவினத்தொகை ரூ. 50,000/–த்தில் 20 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.10,000/– வரையிலும், தாழ்த்தப்பட்ட / பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.12,500/– வரையிலும் வழங்கப்படுகிறது. | அ) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ஆ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>இ) ஏற்கனவே மீன்பண்ணை வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும். | 1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று<br>3. இடுபொருள் வாங்கியமைக்கான பட்டியல்கள்<br>4. தாழ்த்தப்பட்ட/ பழங்குடி யினராயின் அதற்குரிய சான்றிதழ் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | **ஈ) நன்னீர் இறால் / டிரவுட் மீன்வளர்ப்பு** ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு ஆகும் செலவினத்தொகையான ரூ.1.80 இலட்சத்தில் 20 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.36,000/–மும் தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ. 45,000/– வரையிலும் வழங்கப்படுகிறது. | அ) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ஆ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று<br>3. பணிகள் நிறைவேற்றப் பட்டமைக்கான பட்டியல்கள்<br>4. புகைப்படம்<br>5. தாழ்த்தப்பட்ட/ பழங்குடி யினராயின் அதற்குரிய சான்றிதழ் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன. |
| | **உ) நன்னீர் மீன் குஞ்சு பொரிப்பகம் அமைத்தல்** வருடத்திற்கு 10 மில்லியன் மீன் குஞ்சு உற்பத்தி திறன் உள்ள ஒரு ஹெக்டேர் பரப்பில் உள்ள பொரிப்பகத்திற்கு ஆகும் செலவினத் தொகை ரூ. 12 இலட்சத்தில் 10 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.20 இலட்சம் வரை வழங்கப்படும். மலைப்பிரதேசங்களில் | அ) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ஆ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று<br>3. பணிகள் நிறைவேற்றப் பட்டமைக்கான பட்டியல்கள்<br>4. புகைப்படம்<br>5. தாழ்த்தப்பட்ட/ பழங்குடி யினராயின் அதற்குரிய சான்றிதழ் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | அதே உற்பத்தித் திறன் கொண்ட பொரிப்பகத்தினை அமைக்க ஆகும் செலவினத்தொகையான ரூ.16.00 இலட்சத்தில், 10 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.60 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | | | |
| | **ஊ) மீன் தீவனம் தயாரிக்கும் நிலையம் அமைத்தல்** இத்திட்டத்தின் கீழ் ரூ. 7.50 இலட்சம் செலவில் நாள் ஒன்றுக்கு 1.20 குவின்டால் மீன் தீவனம் தயாரிக்கும் நிலையம் அமைக்க 20 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.50 இலட்சம் வரை தொழில் முனைவோர் பெறலாம். | அ) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ஆ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று<br>3. பணிகள் நிறைவேற்றப் பட்டமைக்கான பட்டியல்கள்<br>4. புகைப்படம் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன. |
| | **எ) நன்னீர் இறால் / டிரவுட் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்தல்** வருடத்திற்கு 5 முதல் 10 மில்லியன் இறால் / டிரவுட் மீன்குஞ்சு உற்பத்தி திறன் உடைய ஒரு பொரிப்பகம் அமைக்க ஆகும் செலவினத் தொகை ரூ.12.00 இலட்சத்தில் 20 விழுக்காடு மானியம் அல்லது அதிக பட்சமாக ரூ.2.40 இலட்சம் வரை தொழில் முனை–வோருக்கு ஒருமுறை மட்டும் வழங்கப் படுகிறது | அ) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ஆ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று<br>3. பணிகள் நிறைவேற்றப் பட்டமைக்கான பட்டியல்கள்<br>4. புகைப்படம் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | **ஏ) அலங்கார மீன் குஞ்சு பொரிப்பகங்கள் உட்பட ஒருங்கிணைந்த அலகு அமைத்தல்**<br>வருடத்திற்கு 5 முதல் 10 மில்லியன் மீன்குஞ்சு உற்பத்தித் திறன் உள்ள பொரிப்பகம் உட்பட ஒருங்கிணைந்த அலகு அமைக்க ஆகும் செலவுத்தொகையான ரூ.15.00 இலட்சத்தில், 10 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.50 இலட்சம் அனைத்து தரப்பு மீன்வளர்ப்போருக்கும் வழங்கப்படுகிறது. | அ)) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ஆ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று<br>3. பணிகள் நிறைவேற்றப் பட்டமைக்கான பட்டியல்கள்<br>4. புகைப்படம் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| 20. | **உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும் சலுகைகள் / உதவிகள் (மத்திய மாநில அரசு திட்டம்)**<br><br>1) இறால் பண்ணை பதிவு செய்தல்<br>அ) கடலோரப் பகுதியில் இறால் வளர்ப்பினை மேற்கொள்ள முன்வரும் எந்த ஒரு தனிநபரும், கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவுச் சான்று பெற வேண்டும். | அ)) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ஆ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2. நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று<br>3. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்ததற்கான ஆவணங்கள்.<br>4. பதிவு கட்டணம் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | ஆ) உவர்நீர் மீன்வளர்ப்போர், இறால் பண்ணை பதிவிற்கான விண்ணப்பப் படிவங்களை சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநரிடமிருந்து அல்லது கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, மாவட்ட மீன்துறை உதவி இயக்குநருக்கு வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். | | | |
| | **2) மானிய உதவிகள்**<br>அ) ஒரு ஹெக்டேர் நீர் பரப்பளவில் உவர்நீர் இறால் பண்ணை நிறுவுவதற்கும் / புதுப்பிப்பதற்கும் 25 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.60,000/– வரை வழங்கப்படும் .<br>ஆ) இரண்டு ஹெக்டேர் அல்லது அதற்கு குறைவாக பரப்பளவுள்ள சிறு இறால் வளர்ப்போர் மட்டும் பயனடையலாம். | அ) கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்.<br>ஆ) இத்திட்டத்தின் மூலம், தனி நபர்கள் மட்டுமல்லாமல் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மீனவர்கூட்டுறவு சங்கங்களும் பயனடையலாம்.<br>இ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு மானியம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும். | 1. கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் பதிவு சான்று<br>2. பண்ணை இயக்கத்தில் இருப்பதற்கான சான்றுகள் (புகைப்பட ஆதாரம் உட்பட) | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| 21. | **தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் (NADP)**<br>**1. பல்நோக்கு பண்ணை குட்டைகளில் மீன்வளர்ப்பை மேற்கொள்ள உள்ளீட்டு செலவினத்தில் மானிய உதவியளித்தல்**<br>i) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் டெல்டா | | | |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | மாவட்டங்களில் 900 சதுர மீட்டர் பரப்பளவில் வெட்டப்பட்ட பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பை மேற்கொள்ள உள்ளீட்டு செலவினத்தில் மானிய உதவியளித்தல். மீன் குஞ்சுகள் இயற்கை உரங்கள் மற்றும் அறுவடை செலவினங்களாக ஒரு அலகிற்கு ஆகும் செலவு ரூ. 35,000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு அலகிற்கான உள்ளீட்டு செலவினத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. | அ) பயனாளிகளுக்கு சொந்த நிலம் இருத்தல் வேண்டும்.<br>ஆ) விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்திட முன்னுரிமை வழங்கப்படும்.<br>இ) சிறு மற்றும் குறு விவசாயிகள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். | 1) நில ஆவணங்கள்<br>2) இடுபொருள் வாங்கியதற்கான பட்டியல்கள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| | ii) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் டெல்டா அல்லாத மாவட்டங்களில் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக 2500 சதுர மீட்டர் பரப்பளவில் வெட்டப்பட்ட பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பை மேற்கொள்ள உள்ளீட்டு செலவினத்தில் மானிய உதவியளித்தல். மீன் குஞ்சுகள் இயற்கை உரங்கள் மற்றும் அறுவடை செலவினங்களாக ஒரு அலகிற்கு ஆகும் செலவு ரூ. 46,000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.<br>ஒரு அலகிற்கான | அ) பயனாளிகளுக்கு சொந்த நிலம் இருத்தல் வேண்டும்.<br>ஆ) விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்திட முன்னுரிமை வழங்கப்படும்.<br>இ) சிறு மற்றும் குறு விவசாயிகள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். | 1) நில ஆவணங்கள்<br>2) இடுபொருள் வாங்கியதற்கான பட்டியல்கள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | உள்ளீட்டு செலவினத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. | | | |
| | **2) தமிழ்நாட்டிலுள்ள உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி திறனை உயர்த்துதல்**<br>i) மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நீர்தேக்கங்கள் / குளங்கள் / குட்டைகளில் மீன்பிடிப்பை மேற்கொள்ள மீன்பிடி உபகரணங்களை (நைலான் மீன்பிடி வலைகள்) வழங்குதல்<br>ii) ஒரு அலகு நைலான் வலை (20 கிலோ) யின் விலை ரூ.15,000/– ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. | உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். | 1. மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் என்பதற்கான ஆதாரம்<br>2. வலைகள் வாங்கியதற்கான பட்டியல்கள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| 22. | **தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (உள்நாட்டு மீன்வளம் மற்றும் கடலோர மீன் வளர்ப்பு)**<br>**1. வெள்ளைக்கால் இறால் (Litopenaeus vannamei) பண்ணைகளில் குறிப்பிட்ட நோய் தாக்கும் கிருமிகளற்ற இறால் வளர்ப்பு மேற்கொள்ள கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.**<br>அ) ஏற்கனவேயுள்ள இறால் பண்ணைகளில் Litopenaeus | அ) சம்பந்தப்பட்ட மாவட்டமீன்துறை உதவி இயக்குநரிடம் விண்ணப்பம் அளித்து NFDB முன் அனுமதி பெற்ற பின்னரே பணிகள் துவங்க வேண்டும். | 1) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2) நில ஆவணங்கள்<br>3) வில்லங்கச் சான்று<br>4) CAA பதிவு சான்று<br>5) பண்ணையின் வரைபடம்<br>6) இப்பண்ணைக்காக வேறு எந்த திட்டத்திலும் உதவி பெறப்படவில்லை என்பதற்கான உறுதிமொழிச்சான்று<br>7) திட்ட அறிக்கை (project report) | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | vannamei இறால் வளர்ப்பு செய்வதற்கு தேவையான உயிரி பாதுகாப்பு (Bio security measures), சுத்திகரிப்பு குளம் உட்பட கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.<br>ஆ) 10% சுத்திகரிப்பு குளத்தினை உள்ளடக்கிய 5 ஹெக்டேர் நீர் பரப்புள்ள தனியார் இறால் பண்ணைக்கு கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஒரு அலகிற்கு அமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்தில் 25% (ரூ.3.75 இலட்சத்திற்கு மிகாமல்) மானியமாக (Back ended subsidy) வழங்கப்படும்.<br>இ) பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு மானிய உதவியாக ஒரு அலகிற்கு 30% மானியம் (ரூ. 4.5 இலட்சத்திற்கு மிகாமல்) வழங்கப்படும். | ஆ) தனியார் இறால் பண்ணைகளில் Litopenaeus vannamei இறால் வளர்ப்பு செய்வதற்கு கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு (Coastal Aquaculture Authority) ஆணையத்திடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். (5.00 ஹெக்டேர் முதல் 25.00 ஹெக்டேர் வரை நீர்பரப்புக் கொண்ட இறால் பண்ணைகள் தகுதியானவை). | | |
| | **2. உள்நாட்டு மீன்வளர்ப்பிற்கு வழங்கப்படும் நிதியுதவி**<br>அ) தற்போதுள்ள மீன்பண்ணைகள் / மீன்வளர்ப்பு குளங்களை சீரமைத்து ரூ. 75,000/– செலவில் புதுப்பித்து / சீரமைக்க தீவிர மீன்வளர்ப்பு மேற்கொள்ள, ஒரு ஹெக்டேருக்கு 20 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக | அ) சொந்த நிலம் / குத்தகை நிலம் (குறைந்த பட்சம் 7 வருடம்) வைத்திருக்க வேண்டும்.<br>ஆ) பயனாளி இதே திட்டத்திற்காக வேறு எந்த மானியமும் பெற்றிருக்கக்கூடாது. | 1) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2) நில ஆவணங்கள்<br>3) திட்ட அறிக்கை<br>4) பணி முடிந்த பிறகு பட்டியல்கள்<br>5) புகைப்பட ஆதாரங்கள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | ரூ.15,000/– வழங்கப்படும். தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.18,750/– என்ற விகிதத்தில் வழங்கப்படும்.<br>ஆ) புதிய மீன்வளர்ப்பு குளங்கள் மற்றும் மீன்பண்ணைகள் ரூ.3.00 இலட்சம் செலவில் அமைத்து, தீவிர மீன்வளர்ப்பு மேற்கொள்ள ஒரு ஹெக்டேருக்கு 20 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.60,000/– வழங்கப்படும். தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம், அதிக பட்சமாக ரூ.75,000/– என்ற விகிதத்தில் வழங்கப்படும். | | | |
| | **3. மீன் மற்றும் இறால் வளர்ப்பிற்கு முதலாமாண்டு இடுபொருள் செலவினத்தில் மானியம்.**<br>i) உற்பத்தியை பெருக்கும் பொருட்டு நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் மீன் / இறால் வளர்ப்பு மேற்கொள்ளும் மீன்வளர்ப்போரை ஊக்குவிப்பதற்காக முதலாமாண்டு இடுபொருள் செலவினத்தில் நிதியுதவி வழங்கப்படும். மீன்வளர்ப்பிற்கான முதலாமாண்டு இடுபொருள் செலவினம் ஒரு அலகிற்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.50,000/– என மதிப்பிடப்பட்டுள்ளது. | மீன்வளர்ப்புக் குளம் புதியதாக அமைக்க அல்லது புதுப்பிக்க / சீரமைக்க ஏற்கனவே தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவி பெற்றிருத்தல் வேண்டும். | 1) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2) பட்டியல்கள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | 20% மானியம் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.10,000/– எல்லா மீன் வளர்ப்போருக்கும் வழங்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ஒரு அலகிற்கு 25% மானியம் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.12,500/– வழங்கப்படும். | | | |
| | **4.** 7–8 மில்லியன் நுண்மீன் குஞ்சு உற்பத்தி திறன் உடைய நிலையம் ரூ.12.00 இலட்சம் செலவில் அமைப்பதற்கு 20 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ. 2.40 இலட்சம் வழங்கப்படும். | சொந்த நிலம் / குத்தகை நிலம் (குறைந்த பட்சம் 7 ஆண்டு காலம்) பெற்றிருத்தல் வேண்டும். | 1) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2) நில ஆவணங்கள்<br>3) திட்ட அறிக்கை<br>4) பணி முடிந்த பிறகு பட்டியல்கள்<br>5) புகைப்பட ஆதாரங்கள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| | **5.** 2.5 ஏக்கர் பரப்பளவில் புதிய மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையம் அமைத்து, விரலிகள் வளர்த்து எடுக்க ஆகும் செலவினம் ரூ. 3.00 இலட்சத்தில் 20 விழுக்காடு மானியம் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.60,000/– தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.75,000/– வழங்கப்படும். | சொந்த நிலம் / குத்தகை நிலம் (குறைந்த பட்சம் 7 ஆண்டு காலம்) பெற்றிருத்தல் வேண்டும். | 1) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்<br>2) நில ஆவணங்கள்<br>3) திட்ட அறிக்கை<br>4) பணி முடிந்த பிறகு பட்டியல்கள்<br>5) புகைப்பட ஆதாரங்கள்<br>6) பண்ணை பதிவேடுகள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| | **6. நன்னீர் இறால் வளர்ப்பு**<br>அ) ஒரு அலகிற்கு முதலாமாண்டு இடுபொருள் செலவினம் ஒரு | அ) சொந்தமாக நன்னீர் இறால் வளர்ப்புக் குளம் வைத்து, | 1) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | ஹெக்டேருக்கு ரூ.1,80,000/– என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 20 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.36,000/– அனைத்து நன்னீர் இறால் மீன்வளர்ப்போருக்கும் வழங்கப்படும். | இறால் வளர்ப்பில் ஈடுபட வேண்டும்.<br>ஆ) பயனாளிக்கு சொந்த இடம் / குத்தகை காலம் 10 வருடமாக இருத்தல் வேண்டும்.<br>இ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | 2) பண்ணை பதிவேடு<br>3) இடுபொருள் வாங்கியதற்கான பட்டியல் | |
| 23. | **உள்நாட்டு மீன்பாசி குத்தகை மற்றும் மீன்பிடி உரிமம்**<br>அ) அரசுடமையாக்கப்பட்ட நீர்நிலைகளில், உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மீன்பிடி உரிமம் பெறத் தகுதியுடையவர் ஆவார்கள்.<br>ஆ) இதர நீர்நிலைகளின் மீன்பாசி குத்தகை பெற பொது ஏலத்தில் உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் கலந்து கொள்ளலாம்.<br>இ) துறை கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களின் மீன்பாசி குத்தகை பெற ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் அவ்வப்போது துறையால் வெளியிடப்படும். | தனிநபர், மீனவர் கூட்டுறவு சங்கங்கள், நிறுவனங்கள் முதலியவை. | 1) வருவாய் துறை மூலம் சொத்து மதிப்பு சான்று<br>2) முன் அனுபவச் சான்று<br>3) வருமானவரிச் சான்று<br>4) நிறுவனமாயின் தணிக்கை அறிக்கை, இருப்பு நிலை குறிப்பு, இலாப நட்ட கணக்கு ஆகியன. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| 24. | **மீன்கள் மற்றும் இறால்களுக்கான நோய்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்துதல்.**<br>மீன்வளர்ப்போர், மீன் / இறால் நோய் தாக்குதல் மற்றும் தடுப்பு முறைகள் குறித்த பரிந்துரைகளை மீன்வளத்துறையின் இலவச சேவையை அணுகிப் பெறலாம். | மீன்/இறால் வளர்ப்பில் ஈடுபடுவோர் | – | மீன்வள ஆராய்ச்சி ஆய்வகம், தூத்துக்குடி, சென்னை. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரார் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| 25. | **தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM)**<br>**1. பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு**<br>0.1 ஹெக்டேர் பரப்பளவுள்ள பண்ணை குட்டைகள் வேளாண்பொறியியல் துறை மூலம் ரூ. 50,000/– மதிப்பீட்டில் 10% தனிநபர் பங்கீடாக விவசாயியின் நிலத்தில் உருவாக்கப்பட்டு மீன்வளர்ப்பு மேற்கொள் வதற்காக வழங்கப்படுகிறது. ஒரு முறை உள்ளீட்டுச் செலவினம் ரூ.15,000/– (மீன்குஞ்சுகள் – ரூ. 3,000 மற்றும் உணவிற்காக ரூ12,000/–வழங்கப்படும்) | தேர்வு செய்யப்பட்ட நீர்வள நிலவள உபவடிநிலப் பகுதிகளில் சொந்தமாக நிலம் உள்ளவராய் இருத்தல் வேண்டும். | நில ஆவணங்கள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| | **2. மீன் விதை வங்கிகள் அமைத்தல்**<br>அ) நில மீன்விதை வங்கி மொத்த செலவினத் தொகையான ரூ.3.00 இலட்சத்தில் பணி மேற்கொள்வதற்கு முதலீட்டுச் செலவினமாக ரூ.2.70 இலட்சம் (100% மானியமாக ) மற்றும் உள்ளீட்டுச் செலவினமாக ரூ.0.30 இலட்சம் (50% மானியமாக) வழங்கப்படும். | தேர்வு செய்யப்பட்ட நீர்வள நிலவள உபவடிநிலப் பகுதிகளில் சொந்தமாக நிலம் உள்ளவராய் இருத்தல் வேண்டும். | 1) மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் அல்லது நீர் உபயோகிப்பாளர் சங்க உறுப்பினர்களுக்கான ஆதாரம்<br>2) நில ஆவணங்கள் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | **3. கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்த்தல்.**<br>i) கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பதற்கு தேவையான கூண்டுகள் ரூ.15,000/– 100% மானியத்திலும், உள்ளீடுகளான மீன்குஞ்சு மற்றும் தீவனம் ஆகியவை ரூ.10,000/– 50% மானியத்தில் மீன்வளர்ப்போருக்கு வழங்கப்படுகிறது.<br>ii) ஒரு அலகிற்கான செலவினம் ரூ. 25,000/– ஒருமுறை மானியமாக வழங்கப்படுகிறது. | மீன்குஞ்சு வளர்க்க விருப்பமுள்ளோர் மீனவர் கூட்டுறவு சங்கம் / நீர்உபயோகிப்பாளர் சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். | மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்/ நீர்உபயோகிப்பாளர் சங்க உறுப்பினர் என்பதற்கான சான்று. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| | **4. மீன்பிடி சாதனங்கள் வழங்கும் திட்டம்**<br>உபவடிநிலப் பகுதிகளிலுள்ள குளங்களில் சிறந்த மீன்பிடிப்பினை மேற்கொள்வதற்கு மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு பரிசல், செவுள்வலை, இழுவலை போன்ற மீன்பிடி உபகரணங்கள் 90% மானியத்தில் வழங்கப் படுகிறது.கண்ணாடி நாரிழை பரிசல்கள் செவுள்வலை – ரூ. 15,000 (அல்லது) இழுவலை– ரூ. 20,000 | உபவடிநிலப் பகுதிகளில் உள்ள மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். முழு நேர மீன்பிடிப்பில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும். | மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் என்பதற்கான சான்று. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |

| வ. எண். | திட்டத்தின் பெயர் மற்றும் விபரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி |
|---|---|---|---|---|
| | **5. வண்ணமீன்கள் உற்பத்தி மற்றும் வளர்த்தெடுக்கும் நிலையம் நிறுவுதல்** உபவடிநிலப் பகுதிகளில் மீன்வளர்ப்போர் பயனடைய 2,500 சதுர அடியிலான வண்ணமீன் வளர்க்கும் அலகுகள் ரூ.2.00 இலட்சம் செலவில் கட்டி 100% மானியத்தில் வழங்கப்படுகின்றன. | உபவடிநிலப் பகுதிகளில் நிலம் உள்ளவராக இருத்தல் வேண்டும். | நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| | **6. மீன் விற்பனை நிலையம் (அளவு : 3.6 மீ x 3.0 மீ x 3.0 மீ)** மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அல்லது சுய உதவி குழுக்களுக்கு ரூ.4.50 இலட்சம் செலவில் மீன்விற்பனை நிலையம் 100% மானியத்தில் வழங்கப்படுகிறது. இந்த மீன் விற்பனை நிலையமானது உறைபதன பெட்டி, மின்னணு எடை கருவி, PVC பெட்டிகள், உயிர்மீன் கொள்கலன்கள், உபகரணங்களுடன் கூடிய மின்மோட்டார், துருப்பிடிக்காத கழுவும் தொட்டிகள், கையுறைகள் மற்றும் ஈ பிடிக்கும் கருவிகள் ஆகியவற்றை பெற்றிருக்கும். | அ) உபவடிநிலப் பகுதிகளில் நிலம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>ஆ) பயனாளி சம்மந்தப்பட்ட உபவடிநிலப்பகுதியில் வேளாண் விவசாயியாக இருத்தல் வேண்டும்.<br>இ) முதலில் விண்ணப்பிப் பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | நில ஆவணங்கள்<br>i) பட்டா<br>ii) சிட்டா அடங்கல்<br>iii) FMB வரைபடம்<br>iv) வில்லங்கச் சான்று | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |
| 26. | **தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்.** மீன்பிடிப்பு மற்றும் மீன்பிடித்தொழில் சார்ந்த தொழிலாளர்களுக்கு, தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் இணைப்பு இ–ல் கொடுக்கப்பட்டுள்ளது. | அ) மீன்பிடிப்பு மற்றும் மீன்பிடித்தொழில் சார்ந்த தொழிலாளர்களாக இருக்க வேண்டும்.<br>ஆ) மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநரை அணுகி உரிய படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் இணைப்பு அ–வில் உள்ளன. |

## இணைப்பு அ

## மீன்வளத்துறை

## திட்டச்செயலாக்க அலுவலர்கள் மற்றும் அவர்களது தொலைபேசி குறித்த தகவல்கள்

| மண்டலம் | வரிசை எண். | மாவட்டம் | அலுவலகங்களின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|---|---|---|
| சென்னை | 1 | சென்னை | **தலைமை அலுவலகம்,**<br>மீன்வளத்துறை ஆணையர்,<br>நிர்வாக அலுவலக கட்டடங்கள்,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை 600 006. | 044– 24320791<br>044– 24321927<br>044– 24336311 |
| | 2 | சென்னை | அலுவல் வழி முதல்வர்,<br>மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையம்,<br>தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் கட்டிடம்,<br>2–வது தளம்,<br>அசோக் நகர்,<br>சென்னை–600 083. | 044–24748988 |
| | 3 | சென்னை | மீன்துறை இணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>75, சாந்தோம் நெடுஞ்சாலை,<br>ராஜா அண்ணாமலைபுரம்,<br>சென்னை–600 028. | 044–24938596 |
| | 4 | சென்னை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>249, சூரியநாராயண செட்டி தெரு,<br>இராயபுரம்,<br>சென்னை–600 013. | 044–25951697 |
| | 5 | சென்னை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(மீன்பிடித் துறைமுக மேலாண்மை பிரிவு),<br>மீன்பிடித் துறைமுக அலுவலக வளாகம்,<br>இராயபுரம்,சென்னை–600 013. | 044–25986080 |
| | 6 | சென்னை | மீன்துறை ஆய்வகம்,<br>167, ஈ.வெ.ரா.சாலை, கீழ்ப்பாக்கம்,<br>சென்னை– 600 010. | 044–28361296 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 7 | காஞ்சிபுரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>காஞ்சிபுரம் (இருப்பு) நீலாங்கரை,<br>2/601, கிழக்கு கடற்கரை சாலை,<br>நீலாங்கரை, சென்னை – 600 041. | 044–24492719 |
| | 8 | திருவள்ளூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>11, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,<br>பொன்னேரி – 601 204. | 044–27972457 |
| | 9 | வேலூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>16, 5–வது மேற்கு குறுக்கு தெரு,<br>காந்தி நகர் மேற்கு, காட்பாடி,<br>வேலூர் – 632 006. | 0416–2240329 |
| கடலூர் | 10 | கடலூர் | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>74, ரஞ்சனி பிரியா நகர்,<br>வெளிச்செம்மண்டலம்,<br>கடலூர் – 607 001. | 04142–238170 |
| | 11 | கடலூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>மீன்பிடித் துறைமுக வளாகம்,<br>கடலூர், முதுநகர் – 607 003. | 04142–238170 |
| | 12 | கடலூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>பரங்கிப்பேட்டை, ரேவு மெயின் ரோடு,<br>அண்ணாமலை பல்கலை கழகம் (எதிரில்),<br>பரங்கிப்பேட்டை அஞ்சல் – 608 502.<br>கடலூர் மாவட்டம். | 04144–231353 |
| | 13 | விழுப்புரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>1, விஸ்வலிங்க ஆசாரி தெரு,<br>விழுப்புரம் – 605 602. | 04146–224329 |

| | | | | |
|---|---|---|---|---|
| நாகப்பட்டினம் | 14 | நாகப்பட்டினம் | மீன்துறை இணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>சுதன் டவர் (2–ம் தளம்),<br>பொது அலுவலகச் சாலை,<br>வெளிப்பாளையம்,<br>நாகப்பட்டினம் – 611 001. | 04365–247721 |
| | 15 | நாகப்பட்டினம் | மீன்துறை உதவி இயக்குநர் (வடக்கு),<br>து.து. வளாகம், கச்சேரி சாலை,<br>சீர்காழி, நாகப்பட்டினம் – 609 110. | 04364–271455 |
| | 16 | நாகப்பட்டினம் | மீன்துறை உதவி இயக்குநர் (தெற்கு),<br>1/1795 இரண்டாவது சந்து,<br>கடற்கரை சாலை,<br>நாகப்பட்டினம்–611 001. | 04365–241399 |
| | 17 | திருவாரூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>20/3, சிவம் நகர், ஏ.வி.என் காலனி<br>பனகல் சாலை,<br>திருவாரூர் – 610 001. | 04366–224140 |
| | 18 | தஞ்சாவூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>873/4, அறிஞர் அண்ணா சாலை,<br>கீழவாசல்,<br>தஞ்சாவூர் – 613 001. | 04362–235389 |
| திருச்சி | 19 | திருச்சி | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>எண்.17/2, சமது பள்ளிக்கூடத் தெரு,<br>காஜா நகர்,<br>திருச்சி – 620 020. | 0431–2421174 |
| | 20 | திருச்சி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>4, காயிதேமில்லத் தெரு,<br>காஜாநகர்,<br>மன்னார்புரம்,<br>திருச்சி – 620 020. | 0431–2421173 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 21 | புதுக்கோட்டை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>22, லட்சுமிபுரம் முதல் தெரு,<br>புதுக்கோட்டை – 622 001. | 04322–220069 |
| | 22 | அரியலூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>அறை எண் 234,<br>இரண்டாவது தளம்,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>அரியலூர் –621 704. | 04329–228705<br>04329–228708 |
| இராமநாதபுரம் | 23 | இராமநாதபுரம் | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்,<br>அலுவலக வளாகம்,<br>மாவட்ட கருவூலக் கட்டடம் (முதல் தளம்),<br>இராமநாதபுரம்–623 503. | 04567–231402 |
| | 24 | இராமநாதபுரம் | மீன்துறை உதவி இயக்குநர் (வடக்கு),<br>இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்,<br>அலுவலக வளாகம்,<br>மாவட்ட கருவூலக் கட்டடம் (முதல் தளம்),<br>இராமநாதபுரம் – 623 503. | 04567–230355 |
| | 25 | இராமநாதபுரம் | மீன்துறை உதவி இயக்குநர் (தெற்கு),<br>இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்,<br>அலுவலக வளாகம்,<br>மாவட்ட கருவூலக் கட்டடம் (முதல் தளம்),<br>இராமநாதபுரம்–623 503. | 04567–230402 |
| | 26 | இராமநாதபுரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>மண்டபம்,<br>இராமநாதபுரம் மாவட்டம் – 623 517. | 04573–241066 |
| | 27 | இராமநாதபுரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>1, வடக்கு ரத வீதி,<br>இராமேஸ்வரம் – 623 526. | 04573–221231 |
| | 28 | சிவகங்கை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>4, காளிமுத்தான் தெரு,<br>சிவகங்கை – 630 611. | 04575–240848 |

| | | | | |
|---|---|---|---|---|
| மதுரை | 29 | மதுரை | மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்),<br>பேச்சியம்மன் படித்துறை சாலை,<br>சிம்மக்கல்,<br>மதுரை – 625 001. | 0452–2345903 |
| | 30 | மதுரை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>பேச்சியம்மன் படித்துறை சாலை,<br>சிம்மக்கல்,<br>மதுரை – 625 001. | 0452–2347200 |
| | 31 | விருதுநகர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>286, இராஜாமணி ஹால்,<br>அருப்புக்கோட்டை ரோடு,<br>விருதுநகர் –620 001 | 04562–244707 |
| | 32 | திண்டுக்கல் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>12–A ஸ்பென்சர் காம்பவுண்டு,<br>சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டு அருகில்,<br>திண்டுக்கல் – 624 003. | 0451–2427148 |
| | 33 | தேனி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>வைகை அணை – 625 562. | 04546–237472 |
| தூத்துக்குடி | 34 | தூத்துக்குடி | மீன்துறை இணை இயக்குநர்,<br>தூத்துக்குடி (மண்டலம்),<br>வடக்கு கடற்கரை சாலை,<br>மீன்துறை வளாகம்,<br>திரேஸ்புரம்,<br>தூத்துக்குடி – 628 001. | 0461–2320673 |
| | 35 | தூத்துக்குடி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>வடக்கு கடற்கரை சாலை,<br>மீன்துறை வளாகம்,<br>திரேஸ்புரம், தூத்துக்குடி – 628 001. | 0461–2320458 |
| | 36 | தூத்துக்குடி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>மீன்பிடித் துறைமுக மேலாண்மை பிரிவு<br>தெற்கு கடற்கரை சாலை,<br>தூத்துக்குடி – 628 001. | 0461–2325458 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 37 | தூத்துக்குடி | மீன்துறை ஆய்வகம்<br>வடக்கு கடற்கரை சாலை,<br>மீன்துறை வளாகம், திரேஸ்புரம்,<br>தூத்துக்குடி – 628 001. | 0461–2320673 |
| | 38 | திருநெல்வேலி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>1, லட்சுமி நரசிங்கபுரம் தெரு,<br>பாளையங்கோட்டை,<br>பஸ் ஸ்டாண்டு எதிரில்,<br>பாளையங்கோட்டை,<br>திருநெல்வேலி–627 002. | 0462–2581488 |
| | 39 | திருநெல்வேலி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>மணிமுத்தாறு,<br>அம்பாசமுத்திரம் தாலுகா,<br>திருநெல்வேலி – 627 421. | 04634–251807 |
| | 40 | திருநெல்வேலி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>பழைய தாலுகா அலுவலக கட்டிடம்,<br>இராதாபுரம்–627 141 | 04637–254183 |
| கன்னியாகுமரி | 41 | கன்னியாகுமரி | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>டிஸ்டிலரி ரோடு,<br>வடசேரி பஸ் ஸ்டாண்டு அருகில்,<br>நாகர்கோயில் – 629 001. | 04652–220278 |
| | 42 | கன்னியாகுமரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>டிஸ்டிலரி ரோடு,<br>வடசேரி பஸ் ஸ்டாண்டு அருகில்,<br>நாகர்கோயில் – 629 001. | 04652–227460 |
| | 43 | கன்னியாகுமரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>சைமன் காலனி, குளச்சல் – 629 251. | 04651–226235 |
| | 44 | கன்னியாகுமரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>சின்னமுட்டம்,<br>கன்னியாகுமரி – 626 702. | 04652–248278 |

| | | | | |
|---|---|---|---|---|
| தர்மபுரி | 45 | தருமபுரி | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>5/ 596, ஔவையார் நகர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>எதிரில், தருமபுரி – 636 705. | 04342–233923 |
| | 46 | தருமபுரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>கதவு எண்.3/683F,<br>கோவிந்தகவுண்டர் தெரு,<br>அரசு உயர்நிலைப் பள்ளி எதிரில்,<br>ஔவையார் நகர்,<br>தருமபுரி – 636 705. | – |
| | 47 | கிருஷ்ணகிரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>5/727பாரதி நகர்,<br>3 வது குறுக்கு சந்தைப்பேட்டை,<br>கிருஷ்ணகிரி – 635 001. | 04343–235745 |
| | 48 | சேலம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>கொளத்தூர் சாலை,<br>மேட்டூர் அணை – 636 401. | 04298–244045 |
| பவானிசாகர் | 49 | பவானிசாகர் | மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்),<br>அணை சாலை, பவானிசாகர்,<br>சத்தியமங்கலம் தாலுகா,<br>ஈரோடு – 638 451. | 04295–240451 |
| | 50 | ஈரோடு | மீன்துறை உதவி இயக்குநர்,<br>எண் 4, எஸ்.வி. காம்ளக்ஸ்,<br>வீரப்பம்பாளைய குறுக்குத்தெரு,<br>பெருந்துறை சாலை,<br>ஈரோடு – 638 009. | 0424–2271912 |
| | 51 | ஈரோடு | மீன்துறை உதவி இயக்குநர்,<br>பவானிசாகர் – 638 451. | 04295– 240646 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 52 | நீலகிரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>ஃபிஷ்டேல்,<br>பேருந்து நிலையம் அருகில்,<br>உதகமண்டலம் – 643 001. | 0423–2443946 |
| | | | **மீனவர் நல வாரியம்** | |
| | 53 | சென்னை | உறுப்பினர்–செயலர்,<br>தமிழ் நாடு மீனவர் நல வாரியம்,<br>கிழக்கு கடற்கரை சாலை,<br>நீலாங்கரை,<br>சென்னை – 600 041. | 044–24490944<br>044–24490955 |
| | | | **தமிழ் நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்** | |
| | 54 | சென்னை | செயலாட்சியர்,<br>தமிழ்நாடு வீட்டு வசதிவாரியக் கட்டடம்.<br>2– வது தளம், அசோக் நகர்,<br>சென்னை – 600 083. | 044– 24749024<br>044–24749023 |
| | | | **மீன்வளத் துறை பொறியியல் பிரிவு** | |
| | 55 | சென்னை | தலைமைப் பொறியாளர், மீன்வளத்துறை<br>(பொறியியல் பிரிவு)<br>மீன்பிடித்துறைமுக திட்டங்கள் வட்டம்,<br>மீன்வளத்துறை இயக்குநர்,<br>அலுவலகம், தேனாம்பேட்டை,<br>சென்னை – 600 006. | 044– 24331706 |
| | 56 | சென்னை | தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்,<br>மேலாண்மை இயக்குநர்,<br>எண் 485, தமிழ்நாடு வீட்டு வசதி<br>வாரிய கட்டடம்,<br>நந்தனம், அண்ணா சாலை,<br>சென்னை – 600 035. | 044–24328787<br>044–24326451<br>044–24326471 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 57 | சென்னை | நிர்வாக மேலாளர்,<br>சுனாமி திட்ட செயலாக்க அலகு,<br>485, அண்ணாசாலை,<br>தமிழ் நாடு வீட்டு வசதிவாரிய கட்டடம்,<br>சென்னை – 600 035. | 044–24338468 |
| | 58 | நாகப்பட்டினம் | செயற்பொறியாளர்,<br>மீன்பிடித் துறைமுக கோட்டம்,<br>எண்.2, சங்கரவிநாயகர் கோயில் தெரு,<br>வெளிப்பாளையம்,<br>நாகப்பட்டினம் – 611 001. | 04365–248141 |
| | 59 | தூத்துக்குடி | செயற்பொறியாளர்,<br>மீன்பிடித் துறைமுக கோட்டம்,<br>166, வடக்கு கடற்கரை சாலை,<br>தூத்துக்குடி – 628 001. | 0461–2301072 |
| | 60 | சென்னை | முதன்மை நிர்வாக அலுவலர்,<br>மீன்வளத் தொழில்நுட்பம் மற்றும்<br>பயிற்சி நிலையம்,<br>32, டாக்டர் நெடுஞ்செழியன் சாலை,<br>பெசன்ட் நகர்,<br>சென்னை – 600 090. | 044– 24461199 |
| | 61 | சென்னை | செயற்பொறியாளர்,<br>மீன்பிடித் துறைமுக கோட்டம்,<br>மீன்வளத்துறை இயக்குநர் அலுவலகம்,<br>முதல் தளம், டி.எம்.எஸ்.வளாகம்,<br>தேனாம்பேட்டை, சென்னை – 600 006. | 044–24330068 |
| | 62 | நாகர்கோவில் | செயற்பொறியாளர்,<br>மீன்பிடித் துறைமுக கோட்டம்,<br>டிஸ்டிலரி சாலை,<br>வடசேரி பேருந்து நிலையம் அருகில்,<br>நாகர்கோவில் – 629 001. | 04652–230478 |

## இணைப்பு ஆ

## தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை பயன்படுத்துவதற்கு ஏதுவாக புதிய மீன்பிடி கலன் கட்டுதல்

### வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் மானிய உதவி பெறுவதற்கான தகுதிகள்

தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை பயன்படுத்துவதற்கு ஏதுவாக, புதிய மீன்பிடி கலன் கட்டுவதற்கு மானிய உதவியினை பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தகுதிகள் பின்வருமாறு:

1. தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை பயன்படுத்தும் மீன்பிடி கலன்கள், கடலில் பயன்படுத்துவதற்கு தகுதிவாய்ந்த மரம் / கண்ணாடி நாரிழை / எஃகினால், செவுள்வலை மற்றும் ஆயிரங்கால் தூண்டில் ஆகியவற்றை பயன்படுத்துவதற்கு ஏதுவான தளஅமைப்புடன் கட்டப்பட வேண்டும்.
2. இத்திட்டத்தின் மூலம் மானிய உதவி பெற்று கட்டப்படும் மீன்பிடி கலன், இழுவலை (Trawl) மீன்பிடிப்பிற்கு மாற்றப்பட கூடாது. அதாவது, சூரை மீன்பிடிப்பிற்கான ஆயிரங்கால் தூண்டில் மற்றும் செவுள்வலை கலனானது, முழுநேர ஆழ்கடல் சூரை மீன்பிடிப்பில் ஈடுபடும் கலனாகவே இருத்தல் வேண்டும். இது தொடர்பாக பயனாளி ஒரு பிணைமுறி பத்திரம் மூலம் ஒப்பந்தம் செய்ய வேண்டும். இவ்விதியினை மீறும் செயல், கலனின் பதிவு மற்றும் மீன்பிடி உரிமத்தையும் இரத்து செய்ய வழிவகுக்கும்.
3. கலனின் கட்டமைப்பு வடிவம், இதற்கென அமைக்கப்பட்ட மாநில அளவிலான தொழில்நுட்ப குழுவால் (SLTC) கட்டுமான பணி தொடங்கும் முன் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
4. மானிய உதவியினை பெறுவதற்கு கீழ்க்கண்ட கட்டாயமாக்கப்பட்ட கட்டமைப்புகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்:

| வ. எண் | கட்டாயமாக்கப்பட்ட கட்டமைப்புகள் | குறைந்தபட்ச தேவை |
|---|---|---|
| 1. | படகு கூடு (hull) | படகு கூடானது குறைந்த பட்சம் 15 மீட்டர் முழு நீளமுடையதாகவும் (OAL) கடல் உபயோகத்திற்கு தகுதிவாய்ந்த மரம் / கண்ணாடி நாரிழை / எஃகினால் செய்யப்பட்டு உரிய தளஅமைப்புடனும் இருத்தல் வேண்டும். |
| 2. | முதன்மை இயந்திரம் மற்றும் தளவாடங்கள் | 120 குதிரைத் திறன் |
| 3. | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | |
| அ) | காற்று உறைபதன இயந்திரம்/ (Blast Freezer) குளிரூட்டப் பட்ட கடல் நீர் (Refrigerated sea water (RSW) மற்றும் | 2 மெட்ரிக் டன் திறனுடைய குளிரூட்டும் சுருள் கம்பிகள் (cooling coil) மற்றும் காற்றழுத்தி (compressor) |

| வ. எண் | கட்டாயமாக்கப்பட்ட கட்டமைப்புகள் | குறைந்தபட்ச தேவை |
|---|---|---|
| ஆ) | குளிரூட்டப்பட்ட மீன் அறை/ பனிக்கட்டி மூலம் குளிர வைக்கும் அறை | 250 கிலோ தூண்டில் இரை மீன்கள் தனியாக வைப்பதற்கான வசதியுடன் கூடிய 20–30 கன மீட்டர் |
| இ) | துணை இயந்திரம் (Auxiliary Engine) | 25 குதிரைத் திறன் |
| ஈ) | வலை இழுப்பான் / (Hauling Drum) தூண்டில் இழுப்பான் / (Line hauler) விசை உருளை (Power Roller) | ஆயிரங்கால் தூண்டில், செவுள்வலை இழுக்க எண்ணெய் மூலம் இயங்கும் இயந்திரம். |
| 4. | மீன்பிடி உபகரணங்கள் | செவுள் வலை 2000 கிலோ |
| | | ஆயிரங்கால் தூண்டில் – 1000 மட்டிகள் |
| 5. | உயிர் காப்பு உபகரணங்கள் | உயிர்காப்பு மிதவை (Lifebuoy) / 10 நபர்களுக்கான உயிர்காப்பு சட்டை (Life jacket) |
| 6. | மாலுமியல் மற்றும் தகவல் தொடர்பு கருவிகள், இதர கருவிகள் | மாலுமியல் வரைபடங்கள், காந்த திசைகாட்டி, இருப்பிடங்காட்டி (Global Positioning System), மிகஅதிக அதிர்வு (Very High Frequency) / உயர் அதிர்வு (High Frequency) வானொலி கைபேசி, ஒலிஎதிரொலிப்பான் (Echo sounder) ஆபத்து கால சமிக்ஞை கருவி ( Distress Alert Transmitter (DAT) ) போன்றவை. |

5. 15–20 மீட்டர் முழு நீளமுடையதாகவும் (OAL), பிரத்யேகமாக ஆயிரங்கால் தூண்டில் மற்றும் செவுள்வலை இயக்குவதற்கு ஏதுவாகவும், புதிதாக கட்டப்படும் சூரை மீன்பிடி கலனானது தமிழ்நாடு மீன்வளத்துறையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

6. 20 மீட்டருக்கு மேல் முழு நீளத்தைக் (OAL) கொண்ட மீன்பிடி விசைப்படகு இந்திய அரசின் கடல்சார் வாணிபத் துறையில் (Mercantile Marine Department) பதிவு செய்யப்பட வேண்டும்.

**II. மானிய உதவி பெறும் பயனாளிகளுக்கான தகுதிகள்**

இத்திட்டத்தின் பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்:

1. கூட்டு உரிமையாளர்கள் (அதிகபட்சம் 6 மீனவர்களை கொண்ட குழு) / மீனவர் கூட்டுறவு சங்கம் / தனி நபர்.

2. ஒரு குடும்பத்தில் ஒரு உறுப்பினரே தகுதியானவர் (குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் தனித்தனி குடும்ப அட்டை வைத்திருத்தல் வேண்டும்).

3. தமிழ்நாட்டை சார்ந்த 60 வயதுக்குட்பட்ட முழுநேர கடல் மீன்பிடிப்பில் ஈடுபடுபவராகவும், உயிர் புள்ளியல் தொழில்நுட்ப அடையாள அட்டை (Biometric ID card) பெற்றவராகவும் அல்லது அதற்கு விண்ணப்பித்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பித்ததற்கான சான்று சம்மந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநரிடம் பெற்று சமர்பிக்க வேண்டும்.

4. தமிழ்நாட்டை சார்ந்த மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

5. சூரை மீன்பிடிப்பிற்கென மீன்பிடிப் படகினை மாற்றிடும் திட்டத்தின் கீழ் தமிழக அரசு மூலமாகவோ அல்லது கடற்பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம் மூலமாகவோ இதற்கு முன் மானிய உதவி பெறாதவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**III. முன்னுரிமை வரிசை**

பாக் வளைகுடா பகுதியில் மாற்று மீன்பிடி முறைகளை ஊக்குவித்து, சூரை மீன்பிடிப்பினை மேம்படுத்தும் நோக்கோடு, மொத்த மானியத்தில், 60 விழுக்காடு பாக் வளைகுடா மாவட்டங்களுக்கும், 40 விழுக்காடு இதர மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். பாக் வளைகுடா மாவட்டங்களான இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலிருந்து போதிய விண்ணப்பங்கள் பெறப்படாத பட்சத்தில், பாக் வளைகுடா மாவட்டங்களுக்கான ஒதுக்கீட்டிலிருந்து இதர மாவட்டங்களுக்கு மாற்றி வழங்கப்படும்.

அதிகபட்சம் 6 மீனவர்களைக் கொண்ட குழு / மீனவர் கூட்டுறவு சங்கம் / தனி நபர் இத்திட்டத்தின் மூலம் புதிய சூரை மீன்பிடிப்பு தூண்டில் மற்றும் செவுள்வலை பயன்படுத்தும் மீன்பிடி கலனை கட்ட மானிய உதவி பெறலாம். இருப்பினும், பாக் வளைகுடா மாவட்டங்களில் இழுவலை கலன்களுக்கு (Trawler) ஈடாக, தூண்டில் மூலம் சூரைமீன் பிடிப்பு மற்றும் செவுள்வலை மீன்பிடி கலனாக (Tuna Long liner cum Gill netter) கட்ட விரும்பும் மீனவர்களுக்கு அதிகபட்ச முன்னுரிமை வழங்கப்படும்.

எனவே, முன்னுரிமை கீழ்கண்ட வரிசைப்படி வழங்கப்படும்.

i) இழுவலை படகுகளுக்கு பதிலாக புதிய சூரை மீன்பிடிப்பு படகு கட்டும் குழு (அதிக எண்ணிக்கையிலான இழுவலை மீன்பிடி கலன்களுக்கு ஈடாக சூரை மீன்பிடி கலன் கட்டும் குழுவிற்கு உயர் முன்னுரிமை வழங்கப்படும்.)

ii) இழுவலை மீன்பிடி கலனுக்கு ஈடாக புதிய சூரை மீன்பிடி கலன் கோரும் தனியர்.

iii) மீனவர் கூட்டுறவு சங்கம்.

iv) ஈடாக வழங்க இழுவலை மீன்பிடி கலன் இல்லாத குழு.

v) ஈடாக வழங்க இழுவலை மீன்பிடி கலன் இல்லாத தனியர்.

**IV மானிய உதவி**

**1.** மாநில அளவிலான தொழில்நுட்பக்குழுவால் (SLTC) இறுதி செய்யப்படும், அத்தியாவசியமாக தேவைப்படும் கட்டமைப்புகள் மற்றும் உபகரணங்களின் ஒட்டுமொத்தத் தொகையில் **50** விழுக்காடு அதிகபட்சமாக ரூ.**30.00** இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

**2.** மாநில அளவிலான தொழில் நுட்ப குழுவே (SLTC) கலனின் தகுதியுள்ள கட்டாயமாக்கப்பட்ட கட்டமைப்புகளுக்கான நியாயமான விலையினை முடிவு செய்யும் அதிகாரம் பெற்றதாகும்.

**3.** நிதி உதவியானது, பின்னீட்டு மானியமாக (Back ended subsidy) வழங்கப்படுவதோடு மூன்று கட்டங்களாக விடுவிக்கப்படும். பயனாளி துவக்கத்தில் தனது சொந்த முதலீட்டில் படகு கூட்டினை கட்ட வேண்டும். படகு கட்டுவதற்கு அரசு வழங்கும் மானியத்தொகை போக, மீதமுள்ள தொகைக்கு பயனாளி / பயனாளிகள் குழுவாகவோ / மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ நிதி நிறுனங்களிலிருந்து கடன் பெறுவதற்கான ஆதாரம் அல்லது சொந்த பணத்திற்கான ஆதாரத்தினை வழங்க வேண்டும். பயனாளி வங்கி கடனுதவி பெறாமல் சொந்த பணத்தினை பயன்படுத்தினால், படிவம் VI **(இணைப்பு –9)** ல் கையொப்பமிட வேண்டும். மூன்று கட்டங்களாக விடுவிக்கப்படும் மானிய விபரம் பின்வருமாறு:

| **நிலை** | **பணிமுன்னேற்றம்** | **மானிய உதவி** |
|---|---|---|
| முதற்கட்டம் | படகு கூட்டினை கட்டி முடித்தல் (construction of hull) | பயனாளியால் மேற்கொள்ளப் பட்ட செலவில் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மட்டும். |
| இரண்டாம் கட்டம் | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்கி நிறுவுதல் பணி முடிவுற்ற நிலை. | பயனாளியால் மேற்கொள்ளப் பட்ட செலவில் 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மட்டும். |
| மூன்றாம் கட்டம் | செவுள் வலை மற்றும் ஆயிரங்கால் தூண்டில்களை உள்ளடக்கிய மீன்பிடி உபகரணங்களை வாங்குதல் மற்றும் படகினை மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழுவின் இறுதி அறிக்கையுடன் பதிவு செய்தல். | எஞ்சிய தகுதியுள்ள மானியத் தொகை. |

4. மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழுவின் (RSMC) ஆய்வு மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில அளவிலான நிர்வாக குழு (SLAC)ஒவ்வொரு கட்டமாக மானிய உதவியினை விடுவிக்கும்.

5. மாநில அளவிலான நிர்வாக குழு(SLAC)வின் ஒப்புதலின் அடிப்படையில் ஒவ்வொரு கட்டத்திலும் தகுதியுள்ள மானிய உதவித்தொகையானது சம்மந்தப்பட்ட பயனாளிகளின் / மீனவர் கூட்டுறவு சங்க சேமிப்பு வங்கி கணக்கு / கூட்டு சேமிப்பு வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு, அவ்விவரம் சம்மந்தப்பட்ட பயனாளிகளுக்கு தெரிவிக்கப்படும்.

## V. இத்திட்டத்தினை செயல்படுத்திட உருவாக்கப்பட்ட குழுக்கள்:

பெறப்பட்ட விண்ணப்பங்கள், கீழ்க்காணும் 3 குழுக்கள் மூலம் பரிசீலனை செய்யப்படும். இக்குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு:

### (i) மாநில அளவிலான நிர்வாகக்குழு (State Level Administrative committee (SLAC)

| | | |
|---|---|---|
| 1 | மீன்துறை இயக்குநர் | தலைவர் |
| 2 | மீன்துறை கூடுதல் இயக்குநர் (கடல் வளம்) | உறுப்பினர் |
| 3 | மீன்துறை கூடுதல் இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) | உறுப்பினர் |
| 4 | மீன்துறை இணை இயக்குநர் (ஆராய்ச்சி) | உறுப்பினர் |
| 5 | மீன்துறை இணை/துணை இயக்குநர் (பொறியியல்) | உறுப்பினர் |
| 6 | அரசு துணை செயலர் (மீன்வளம்),கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்துறை, சென்னை | உறுப்பினர் |
| 7 | கணக்கு அலுவலர், தலைமையலுவலகம் | உறுப்பினர் |
| 8 | இந்திய மீன்வள அளவைதளம் (FSI) – பிரதிநிதி, சென்னை | உறுப்பினர் |
| 9 | கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணைய (MPEDA) பிரதிநிதி, சென்னை | உறுப்பினர் |
| 10 | மீன்துறை துணை இயக்குநர் (விரிவாக்கம்) | உறுப்பினர் கூட்டுநர் |

- ஒப்புதல் அளித்திட போதுமான அளவு விண்ணப்பங்கள் தயாராக உள்ளபோது மாநில அளவிலான நிர்வாக குழு (SLAC)க் கூட்டம் அவ்வப்பொழுது கூட்டப்படும்.
- கூட்டம் நடத்திட தேவையான குறைவெண் வரம்பு (Quorum) தலைவரையும் சேர்த்து ஐந்து உறுப்பினர்கள் ஆகும் (50%).

**பொறுப்புகள்:**

1. மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC) மற்றும் மாநில அளவிலான தொழில்நுட்ப குழு (SLTC) விடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களை இணைப்பு **2–** ல் குறிப்பிடப்பட்டுள்ள சரிபார்ப்பு பட்டியலுடன் சரிபார்த்து மானியத் தொகையினை விடுவித்திட கூர்ந்தாய்வு செய்தல்.

2. முன்னுரிமை வரிசை மற்றும் மூப்புநிலை அடிப்படையில் பணி ஆணை வழங்குவதற்கு பரிந்துரைத்தல்.

3. மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC) வின் ஆய்வு மற்றும் பரிந்துரையின் அடிப்படையில் தகுதியான மானியத் தொகைக்கு ஒப்புதல் அளித்தல்.

4. மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC) விடமிருந்து படகு கட்டுமான பணி குறித்து அவ்வப்போது பெறப்படும் முன்னேற்ற அறிக்கையினை ஆய்வு செய்தல்.

**(ii) மாநில அளவிலான தொழில்நுட்பக்குழு (State Level Technical Committee (SLTC)**

| | | |
|---|---|---|
| 1 | மீன்துறை கூடுதல் இயக்குநர் (கடல் வளம்) | தலைவர் |
| 2 | மீன்துறை கூடுதல் இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) | உறுப்பினர் |
| 3 | மீன்துறை இணை இயக்குநர் (ஆராய்ச்சி) | உறுப்பினர் |
| 4 | மீன்துறை இணை/துணை இயக்குநர் (பொறியியல்) | உறுப்பினர் |
| 5 | பொது மேலாளர், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், சென்னை | உறுப்பினர் |
| 6 | இந்திய மீன் அளவை தளம் (FSI) பிரதிநிதி, சென்னை | உறுப்பினர் |
| 7 | மத்திய மீன்வள கடல் பொறியியல் மற்றும் பயிற்சி நிலையம் (CIFNET), பிரதிநிதி சென்னை | உறுப்பினர் |
| 8 | கடல்சார் வாணிபத் துறை (MMD), சென்னை | உறுப்பினர் |
| 9 | மத்திய மீன் தொழில்நுட்ப நிலைய (CIFT) பிரதிநிதி, கொச்சி | உறுப்பினர் |
| 10 | கடல்பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம் (MPEDA) பிரதிநிதி, சென்னை | உறுப்பினர் |
| 11 | சம்பந்தப்பட்ட மீன்துறை இணை/துணை மற்றும் உதவி இயக்குநர் | உறுப்பினர் |
| 12 | மீன்துறை துணை இயக்குநர் (விரிவாக்கம்) | உறுப்பினர் / கூட்டுநர் |

- ஒப்புதல் அளித்திட போதுமான அளவு விண்ணப்பங்கள் தயாராக உள்ளபோது மாநில அளவிலான நிர்வாக குழு (SLAC)க் கூட்டம் அவ்வப்பொழுது கூட்டப்படும்.
- கூட்டம் நடத்திட தேவையான குறைவெண் வரம்பு (Quorum) தலைவரையும் சேர்த்து ஆறு உறுப்பினர்கள் ஆகும். இவர்களில் இருவர் மீன்வளத்துறை சாராத உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

**பொறுப்புகள்:**

1. மீன்பிடிக் கலனை கட்டுவதற்கு முன்பு பயனாளியால் அளிக்கப்பட்ட மீன்பிடி கலனின் வடிவமைப்பிற்கு ஒப்புதல் அளித்தல்.
2. கட்டாயமாக்கப்பட்ட உபகரணங்களை முடிவு செய்தல்.
3. கட்டாயமாக்கப்பட்ட உபகரணங்களின் தொழில்நுட்ப விவரக்குறிப்புகளை நிர்ணயம் செய்தல்.
4. கட்டாயமாக்கப்பட்ட உபகரணங்களுக்கு தகுதியான நியாயமான விலையினை நிர்ணயம் செய்தல்.

**(iii) மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக்குழு (Regional Level Scrutinizing and Monitoring Committee (RSMC)**

| | | |
|---|---|---|
| 1 | மண்டல மீன்துறை இணை/துணை இயக்குநர் | தலைவர் |
| 2 | கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணைய (MPEDA) பிரதிநிதி | உறுப்பினர் |
| 3 | வல்லுநர், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| 4 | சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர் | உறுப்பினர்/ கூட்டுநர் |
| 5 | மீன்வள பொறியியல் மேற்பார்வையாளர் | உறுப்பினர் |

**பொறுப்புகள்:**

1. மீன்துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை இதற்கென வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் விண்ணப்பங்களை பரிசீலித்து பயனாளிகளுக்கு விரைவாக திட்டப் பயன்கள் கிடைத்திடச் செய்தல்.
2. மாநில அளவிலான தொழில்நுட்பக் குழு (SLTC) ஒப்புதலளித்த வடிவமைப்பின்படி படகின் கட்டுமானப்பணிகள் நடைபெறுவதை பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்தல் மற்றும் பணி முடிவுற்றவுடன் சான்றளித்தல்.
3. கட்டுமானப்பணிகளுக்கு தரமான பொருட்கள் உபயோகப்படுத்தப்படுவதை உறுதி செய்தல். ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மானியம் பெற தகுதியற்றவையாகும்.
4. மாநில அளவிலான நிர்வாகக் குழு (SLAC) வின் ஒப்புதல் மற்றும் மானியம் விடுவிப்பிற்கான தகுதிவாய்ந்த விண்ணப்பங்களை பரிந்துரை செய்தல்.

5. நிலை வாரியான கட்டுமான பணி முன்னேற்ற அறிக்கையினை மாநில அளவிலான நிர்வாகக்குழு (SLAC) விற்கு தெரிவித்தல்.

6. புகைப்படத்துடன் திட்ட செயல்பாட்டினை ஆவணப்படுத்துதல்.

**VI. விண்ணப்பம் சமர்ப்பித்தல்**

1. தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற, மீன்வளத்துறை இயக்குநரகம் மற்றும் கடலோர மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக பெரிய அளவில் விளம்பரம் செய்யப்பட வேண்டும். இத்திட்டம் குறித்தான வழிகாட்டு நெறிமுறைகள் மண்டல மீன்துறை இணை/துணை இயக்குநர்கள் மற்றும் கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட வேண்டும்.

2. விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்களை மீன்வளத்துறையின் இணையதளமான www.fisheries.tn.gov.in –லிருந்து கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது, விண்ணப்ப படிவங்களை மண்டல மீன்துறை இணை/துணை இயக்குநர்கள் மற்றும் கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

3. விண்ணப்பதாரர் முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்களை (இணைப்பு –1ல் உள்ள படிவம் I ), இணைப்பு –2ல் உள்ள சரிபார்ப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாயமாக்கப்பட்ட இணைப்புகளுடன் மீன்துறை இயக்குநர், தேனாம்பேட்டை, சென்னை–600 006 என்ற முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அறிவிப்பு வெளியிட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு மாநில அளவிலான பதிவு எண் வழங்கப்படும். தபால் மூலம் தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்களுக்கு இத்துறை பொறுப்பாகாது. பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு, அதன் பதிவு எண்ணுடன் கூடிய ஒப்புதல் ரசீது இணைப்பு – 3 ல் உள்ளபடி விண்ணப்பதாரருக்கு அனுப்பப்படும்.

4. அங்கீகாரம் பெற்ற / தகுதிவாய்ந்த கப்பல் / மீன்பிடிகலன் கட்டுமான வரைவாளர் (Authorised Naval Architect) அல்லது அதுபோன்ற அங்கீகாரம் பெற்ற நபரிடமிருந்து சான்று அளிக்கப்பட்ட சரியான வடிவமைப்பு வரைபடம் மற்றும் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் மீன்பிடி கலனுக்கான இதர தொழில்நுட்ப விபரங்களுடன் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

**VII விண்ணப்பங்கள் பரிசீலனை செய்தல்**

1. மீன்துறை இயக்குநரகத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர்களால் அளிக்கப்பட்ட விவரங்களை கூர்ந்தாய்வு செய்து, முன் தேர்வு செய்திட ஏதுவாக சம்பந்தப்பட்ட மண்டல பரிசீலனை கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC) விற்கு அனுப்பப்படும்.

2. சரியான விவரங்களுடன் விண்ணப்பிக்காத விண்ணப்ப படிவங்களை மண்டல அளவிலான பரிசீலனை மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC), விண்ணப்பதாரருக்கு திருப்பி அனுப்பும். அந்த விண்ணப்ப படிவங்களில் காணப்படும் குறைகளை களைந்திட அல்லது கூடுதல் விவரங்களுடன் மீள சமர்ப்பிக்க கோரும் (இணைப்பு – 4ல் படிவம் II). அவ்வாறு திருப்பியனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு,விண்ணப்பதாரர் களிடமிருந்து குறையுள்ள விண்ணப்பத்தினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை பெறப்பட வேண்டும்.

3. விண்ணப்பதாரர் தகவல் பெறப்பட்ட 10 தினங்களுக்குள் கோரப்பட்ட விவரங்களை/ விண்ணப்பத்தினை மீள சமர்பிக்க வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மீள சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில் விண்ணப்பத்தாரர் மூப்பு நிலையை இழக்க நேரிடும். நிவர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், தகவல் பெறப்பட்ட 30 தினங்களுக்குள் மீள பெறப்படவில்லையெனில், விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

4. தகுதி வாய்ந்த விண்ணப்பங்களை மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழு (RSMC) மாநில அளவிலான தொழில்நுட்ப குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பும் (இணைப்பு 5ல் உள்ள படிவம் III).

5. தகுதி வாய்ந்த பயனாளியால் சமர்ப்பிக்கப்பட்ட மீன்பிடி கலனின் வடிவமைப்பு மாநில அளவிலான தொழில்நுட்ப குழு (SLTC) வினால், தேர்ந்த நிறுவனத்தின் (Expert Agency) ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும். இதனில் மாறுதல் தேவைப்படும் பட்சத்தில் அந்நிறுவனம் நிலையான அளவுகளுக்கு (Standard Specification) ஏற்றவாறு மாற்றங்களை மேற்கொள்ளும். இந்த வடிவமைப்பு மற்றும் வரைபடங்களை சரிபார்க்க மாற்றம் செய்வதற்கு ஏதேனும் செலவினங்கள் ஏற்படின் அதனை விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

6. மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழு (RSMC) வினால் பரிசீலனை செய்து பெறப்பட்ட விண்ணப்பங்கள், 40 நாட்களுக்குள் மீன்பிடி கலனின் உள்கூடு வடிவமைப்பு மற்றும் கட்டாயமாக்கப்பட்ட அமைப்புகளின் ஒப்புதல் பெறவேண்டி மாநில அளவிலான தொழில்நுட்ப குழு (SLTC)விடம் சமர்ப்பிக்கப்படும்.

7. மாநில அளவிலான தொழில்நுட்ப குழு (SLTC), மீன்பிடிகலனின் வடிவமைப்புக்கு ஒப்புதல் அளித்து, கட்டாயமாக்கப்பட்ட அமைப்புகளுக்கான பொருட்களுக்கு நியாயமான, தகுதியான விலையினை நிர்ணயிக்கும்.

8. மாநில அளவிலான தொழில் நுட்ப குழு (SLTC)–வின் பரிந்துரைக்கிணங்க மாநில அளவிலான நிர்வாகக்குழு (SLAC) முன்னுரிமை வரிசை அடிப்படையில் பணி ஆணை (இணைப்பு 6ல் உள்ள படிவம் III)ல் வழங்கும்.

9. விண்ணப்பங்கள் பெறுதலுக்கான கடைசி நாளிலிருந்து பணி ஆணை வழங்குவதற்கிடையேயான அனைத்து நடவடிக்கைகளுக்குமான காலக்கெடு 90 நாட்கள் ஆகும்.

## VIII. கட்டுமானப்பணி துவங்கி முழுவதுமாக முடிப்பதற்கான காலக்கெடு

1. விண்ணப்பதாரர் பணி ஆணை கிடைத்த 15 நாட்களுக்குள் படகு கட்டுமானப்பணியினை துவக்க வேண்டும். மனுதாரர் 15 நாட்களுக்குள் பணி துவங்காமல் இருப்பது மண்டல கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC)வின் முதல் ஆய்வின்பொழுது தெரியவந்தால் மனுதாரர் வேலை துவங்காததற்கான காரணத்தை 7 நாட்களுக்குள் தெரிவிக்க விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பப்படும். பதில் பெறப்படாத பட்சத்தில் எந்தவித முன்னறிவிப்புமின்றி விண்ணப்பதாரருக்கு பணிமுறிவு ஆணை வழங்கப்படும். விண்ணப்பதாரர் பணி ஆரம்பிக்காததற்கான காரணம் நியாயமானதாக இருந்தால், மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC), பணி துவங்க மேலும் ஒரு வார கால அவகாசம் வழங்கலாம். இருப்பினும், மீன்பிடிக்கலன் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கட்டி முடிக்கப்படவில்லையெனில், பிரிவு VIII – பத்தி 2–ல் தெரிவித்தவாறு அபராதம் பொருந்தும்.

2. பயனாளி தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை பயன்படுத்துவதற்கான மீன்பிடி கலன் முழுவதுமாக கட்டி முடிப்பதற்கான காலக்கெடு பணி ஆணை பெற்ற நாளிலிருந்து ஒன்பது மாதங்கள் ஆகும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் படகு கட்டுமான பணி முடிவுற்று மீன்பிடிக்கலனிற்குத் தேவையான மீன்பிடி உபகரணங்கள் வாங்கவில்லையென்றால் கீழ்க்காணும் அபராததொகை மானியத் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| 10–வது மாதம் | – | ரூ. 50,000 |
| 11–வது மாதம் | – | ரூ. 1,00,000 |
| 12–வது மாதம் | – | ரூ.2,00,000 |

3. பயனாளியின் காரணங்கள் நியாயமானதாக இருப்பின், அதனடிப்படையில் அபராதத் தொகை பிடித்தத்தில் மாற்றம் செய்திட மாநில அளவிலான நிர்வாக குழுவிற்கு (SLAC) அதிகாரம் உண்டு.

## IX. கண்காணித்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்

1. பணி ஆணை வழங்கிய 15ம் நாள் மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC) முதல் ஆய்வினை நிகழ்த்தி பணி துவங்கியதை மாநில அளவிலான நிர்வாக குழுவிற்கு (SLAC) தெரிவிக்க வேண்டும்.

2. கட்டுமான பணி முடிவடையும் ஒவ்வொரு நிலையிலும், பயனாளி மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC)வின் ஆய்விற்காக தெரிவிக்க வேண்டும்.

3. மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC) படகு கட்டுமானப் பணியை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வு செய்யும். கீழ்க்கண்ட 3 நிலைகளில் பணிமுன்னேற்றத்தை கட்டாயமாக ஆய்வு செய்ய வேண்டும்.

   i. மீன்பிடிக்கலனின் உள்கூடு (Hull) அமைக்குப்பணி முடிவுற்ற நிலை

   ii. இயந்திரம், இதர உபகரணங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் தளவாட பொருட்கள் வாங்கி பொருத்துதல்

   iii. மீன்பிடி வலைகள் வாங்குதல் மற்றும் இணையதளம் மூலம் கலன் பதிவு செய்தல்

4. மாநில அளவிலான தொழில்நுட்ப குழு (SLTC) ஒப்புதலின்படி கட்டுமானப்பணி முன்னேற்றத்தினை குழு கண்காணிக்க வேண்டும். இப்பணிகளில் ஏதேனும் மாறுபாடு இருப்பின் மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழு (RSMC) அதனை ஆய்வு அறிக்கையில் சேர்த்து ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

5. மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழு (RSMC) ஆய்வறிக்கை மற்றும் நிலைவாரியான கட்டுமான பணி முடிந்த அறிக்கையினை உரிய ஆவணங்கள் மற்றும் பரிந்துரையுடன் (இணைப்பு 7 படிவம் V–ன்படி) கூடிய கருத்துருவினை மாநில அளவிலான நிர்வாக குழு (SLAC)விடம் பல்வேறு நிலைக்கான மானியத்தொகை விடுவித்திட சமர்ப்பிக்க வேண்டும்.

6. ஆய்வறிக்கை, பணி முடித்தமைக்கான சான்று, படகு கட்டுமானப் பணிகளின் பல்வேறு நிலைகளில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழு (RSMC) வின் அறிக்கையை இணைப்பு 8 ல் உள்ள சரிபார்ப்பு பட்டியலுடன் சரிபார்த்து மாநில அளவிலான நிர்வாகக் குழு நிலைவாரியான மானிய உதவித் தொகையினை விடுவிக்கும்.

7. தேவைப்படும் பட்சத்தில் மீன்பிடி கலனின் கட்டுமானம் மற்றும் வடிவமைப்பு போன்றவற்றை சரிபார்க்கவும் மற்றும் ஆவணங்களை சரிபார்க்கவும் மாநில அளவிலான நிர்வாகக் குழு (SLAC) சிறப்பு குழு ஒன்றினை அனுப்பலாம்.

## X. இதர நிபந்தனைகள்

இத்திட்டத்தினை செயல்படுத்திடுவதற்கான இதர நிபந்தனைகள் பின்வருமாறு:–

1. இத்திட்டத்தின் நிதியுதவியுடன் கட்டப்படும் சூரை மீன்பிடி கலன்கள், இழுவலை மூலம் மீன்பிடிப்பதற்கு கட்டாயமாக அனுமதிக்கப்பட மாட்டாது.

2. மீன்துறை இத்திட்டத்தின் தாக்கத்தினை ஆராய்வதற்காக இந்த திட்டத்தின் பயனாளிகள் மீன்பிடிப்பு விவரங்களை மீன்துறை உதவி இயக்குநர் / தமிழ் நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்டம் 1983 ன்படி அங்கீகரிக்கப்பட்ட அலுவலரிடம் அதற்கான படிவத்தில் ஒவ்வொரு மீன் பிடிப்பு முடிவடையும் பொழுது அளிக்க வேண்டும்.

3. ஏற்கெனவே கடல்பொருள் ஏற்றுமதி ஆணையம் (MPEDA) / மீன்வளத்துறை / இதர அரசு துறைகள் / அரசு சார்ந்த நிறுவனங்களிடமிருந்து சூரை மீன் பிடிப்பிற்கு மாறுதல் திட்டத்தின் கீழ் மானிய உதவி பெற்ற பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் மானிய உதவித் தொகையினை பெறுவதற்கு 5 ஆண்டு கால இடைவெளி முடிவடைந்த பிறகே பெற முடியும். இது குறித்து சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர் சான்றளிக்க வேண்டும்.

4. மீனவர் எவரேனும் தவறான தகவல்களை வேண்டுமென்றே அளித்து மானிய உதவியை பெற்றிருப்பின், அதற்கு அபராதமாக வரிவிலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய் வழங்கப்படுவது நிறுத்தப்படுவது உள்ளிட்ட இதர நலத் திட்டங்களில் உதவி பெறுவதற்கான தகுதியினை இழக்க நேரிடுவதுடன், வருவாய் திரும்பபெறும் சட்டம் / பிறமுறைகளில் தனியர் / குழு / சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களிடமிருந்து மானியத்தை திரும்ப பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதே சமயத்தில் உரிய குற்றவியல் நடவடிக்கைகளும் துவங்கப்படும்.

5. பயனாளி இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தூண்டில் மூலம் சூரைமீன் பிடிப்பு மற்றும் செவுள்வலை பயன்படுத்தும் மீன்பிடிக்கலனை மீன்பிடிப்பு தொடங்கிய நாளிலிருந்து குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு விற்க கூடாது.

6. புதிதாக கட்டப்பட்ட மீன்பிடி கலனின் பதிவுச்சான்று புத்தகம் மற்றும் பிரத்தியேகப் பதிவேட்டில் மானியம் வழங்கப்பட்ட விவரங்களை அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் பதிவுகள் செய்ய வேண்டும்.

7. மீன்பிடிக்கலன் இணையதளம் மூலம் பதிவு செய்த பிறகு, குறைந்த பட்சமாக மானியம் வழங்கப்பட்ட தொகைக்கு கட்டாயம் காப்புறுதி செய்ய வேண்டும். காப்புறுதிக்கான சந்தாத் தொகையினை, பயனாளி தனது சொந்த செலவில் செலுத்த வேண்டும்.

8. புதிதாக கட்டப்பட்ட மீன்பிடிக்கலனை இணையதளத்தில் பதிவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் பதிவு செய்யப்பட வேண்டும். மீன்வளத்துறை / கடல்சார் வாணிபத் துறையால் அவ்வப்போது தெரிவிக்கப்படும் குறிப்பிட்ட வர்ணப் பூச்சு பூச வேண்டும்.

9. இந்த திட்டத்தில் கட்டப்படும் படகு, மாநிலத்திலுள்ள அனைத்து மீன்பிடி துறைமுகங்களில் தங்குதவற்கும், பிடித்த மீன்களை இறக்குவதற்கும் மற்றும் தேவைப்படும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொள்ளவும் அனுமதி வழங்கப்படும்.

10. பணி ஆணை கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குக்குள் பயனாளிகள் மீன்துறை இயக்குநருடன் ஒரு ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.

11. இந்த தூண்டில் மூலம் சூரை மீன் பிடித்தல் மற்றும் செவுள்வலை பயன்படுத்தும் மீன்பிடி கலனை புதிதாக கட்டுவதற்கு 50 விழுக்காடு மானிய உதவி மீனவர்களுக்கு வழங்கும் இத்திட்டத்தின் வழிகாட்டு முறைகளை, அவ்வப்போது தேவையின் அடிப்படையில் மீன்துறை இயக்குநருடன் கலந்து ஆலோசித்து மாற்றுவதற்கு அரசுச் செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறைக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

**வழிகாட்டு நெறிமுறைகளின் இணைப்புகளின் பட்டியல்**

| **வ. எண்** | **இணைப்பு எண்** | **படிவ எண்** | **தலைப்பு** |
|---|---|---|---|
| 1. | இணைப்பு 1 | படிவம் – I | விண்ணப்ப படிவம் |
| 2 | இணைப்பு 2 | - | விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவற்றின் பட்டியல். |
| 3 | இணைப்பு 3 | - | விண்ணப்பத்திற்கான ஒப்புகை ரசீது |
| 4 | இணைப்பு 4 | படிவம் – II | மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழு விண்ணப்பத்தில் குறை களைய கோரும் படிவம் |
| 5 | இணைப்பு 5 | படிவம் – III | விண்ணப்ப தேர்வு நடவடிக்கையின் போது மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழுவினால் நிரப்பப்பட வேண்டிய படிவம். |
| 6 | இணைப்பு 6 | படிவம் – IV | புதிய தூண்டில்முறை சூரைமீன் பிடிப்பு மற்றும் செவுள் வலை மீன்பிடி படகினை 50% மானியத்தில் கட்டுவதற்கான பணி ஆணை. |
| 7 | இணைப்பு 7 | படிவம் – V | மானியத்தை விடுவித்திட மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழுவின் பரிந்துரை. |
| 8 | இணைப்பு 8 | - | மானியத்தை விடுவிப்பதற்கான சரிபார்ப்பு பட்டியல் |
| 9 | இணைப்பு 9 | படிவம் – VI | விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டிய உறுதி மொழி. |

## இணைப்பு – I

### படிவம் – 1

### தூண்டில் மூலம் சூரைமீன் பிடிப்பு மற்றும் செவுல்வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடி கலனை 50 விழுக்காடு மானியத்தில் கட்டுவதற்கான விண்ணப்பப் படிவம்

| அலுவலக உபயோகத்திற்கு மட்டும் | | | | விண்ணப்பதாரரின் விபரங்கள் | |
|---|---|---|---|---|---|
| விண்ணப்பம் பெற்ற தேதி: | | | 1 விண்ணப்பதாரரின் விபரங்கள் | 2 விண்ணப்பதாரரின் விபரங்கள் | 3 விண்ணப்பதாரரின் விபரங்கள் |
| விண்ணப்ப எண் : | | | | | |
| பதிவெண்: (Registration No.) | | | | | |
| | | | 4 விண்ணப்பதாரரின் விபரங்கள் | 5 விண்ணப்பதாரரின் விபரங்கள் | 6 விண்ணப்பதாரரின் விபரங்கள் |

| வ. எண். | விவரங்கள் | 1 குழுத் தலைவர் | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரர் பெயர்/கள் | | | | | | |
| 2 | தகப்பனார் பெயர் | | | | | | |
| 3 | வயது | | | | | | |
| 4 | நிரந்தர முகவரி | | | | | | |
| 5 | தற்போதைய முகவரி (தொடர்பு கொள்ள வேண்டிய) | | | | | | |
| 6 | கைப்பேசி எண். / தொலைபேசி எண் | | | | | | |
| 7 | மீனவர் கூட்டுறவு சங்கத்தின் பெயர் மற்றும் பதிவு எண். | | | | | | |
| 8 | தொலைபேசி எண் | | | | | | |
| 9 | மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) | | | | | | |
| 10 | கல்வித்தகுதி | | | | | | |
| 11 | தொடர்ந்து தொழிலிலுள்ள மீனவரா ? | | | | | | |

| வ. எண். | விவரங்கள் | 1 குழுத் தலைவர் | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | மீன்பிடிக் கலனின் உரிமையாளரா ? | | | | | | |
| | ஆம் எனில் மீன் பிடி கலனின் விவரங்கள் | | | | | | |
| 13 | மீன்பிடி கலனின் வகை | | | | | | |
| | இணையதள பதிவு எண். | | | | | | |
| | மீன்பிடி கலன் கட்டப்பட்ட ஆண்டு/ மீன்பிடி கலனின் வயது | | | | | | |
| | இயந்திரமயமாக்கப்பட்டிருப்பின், இயந்திரம் எண்/ தயாரிப்பு | | | | | | |
| | காப்புறுதி விவரம் | | | | | | |
| | காப்புறுதி நிறுவன பெயர்: | | | | | | |
| | காப்புறுதி தொகை: | | | | | | |
| | காப்புறுதி கால அளவு: | | | | | | |
| 14 | மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினரா ? ஆம், எனில் கூட்டுறவு சங்க பெயர் மற்றும் உறுப்பினர் எண். | | | | | | |
| 15 | அடையாள அட்டை விவரம் (உயிரி தொழில்நுட்ப அடையாள அட்டை நகல்) (Bio Metric ID Card) | | | | | | |
| | குடும்ப உணவு பங்கீட்டு அட்டை விபரம் (Family Ration card) | | | | | | |
| 16 | வங்கி கணக்கு விவரம்/ | | | | | | |
| | நிதி விவரம் | | | | | | |
| | வங்கி கணக்கு வகை | | | | | | |
| | வங்கியின் பெயர் | | | | | | |
| | வங்கி கிளையின் பெயர் | | | | | | |
| | வங்கி கணக்கு எண். | | | | | | |

**மானிய உதவியின்கீழ் கட்டப்படவிருக்கும் புதிய தூண்டில் மூலம் சூரை மீன் பிடிப்பு மற்றும் செவுள்வலை பயன்படுத்தும் மீன்பிடிகலன் தொடர்பான விவரங்கள்**

| | |
|---|---|
| மீன்பிடி கலனின் மொத்த நீளம் (OAL) | |
| மீன்பிடி கலனின் விரிவான வடிவமைப்பு (Design) விவரங்கள் வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா ? (இல்லையெனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்) | |
| கட்டுமானப் பொருள் | |
| கண்ணாடி நாரிழை | |
| இரும்பு (ஸ்டீல்) | |
| தரமான மரம்<br>மீன்பிடி கலன் கட்டப்படவிருக்கும் நிறுவனத்தின் பெயர் மற்றும் முழு முகவரி: | |
| மீன்பிடி கலனில் ஏற்படுத்தப்படவுள்ள /கொள்முதல் செய்யப்படவுள்ள வசதிகள் / உபகரணங்கள் | கொள்ளளவு / அளவு |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| பொருத்தப்படவிருக்கும் இயந்திர விவரங்கள் | |
| தயாரிப்பு | |
| குதிரைத்திறன் | |
| உத்தேசிக்கப்பட்ட இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் | |
| 1. சொந்த பணம் | |
| 2. வங்கி நிதி | |
| வங்கி மூலம் நிதி ஆதாரம் திரட்டப்படும் எனில், விரிவான விவரம் தெரிவிக்கவும் | |
| வங்கியின் பெயர் | |
| வங்கியின் முழு முகவரி | |
| வங்கியின் கொள்கையளவில் கடன் ஒப்பளிப்பு ஆணை (Inprinciple approval letter) | |

## விண்ணப்பதாரரின் உறுதிமொழி

சூரைமீன்பிடிப்பிற்கு புதிய மீன்பிடி கலனை புதிதாக கட்டட அரசின் மானிய உதவியினை கோரும்.

1) ..........................2) .......................3) ...........................4)........................... 5).................................6).............................. ஆகிய நாங்கள், விண்ணப்பம் மற்றும் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எங்களது அறிவுக்கும் மற்றும் நம்பிக்கைக்கும் உட்பட்ட வரையில் உண்மையென உறுதி கூறுகிறோம். மேலும், தமிழக அரசு மீன்வளத்துறையின் மூலம் இவ்விண்ணப்பம் தொடர்பாக கூடுதல் விவரங்கள் கோரப்படின், அவற்றினை அளிப்பதற்கு பொறுப்பேற்கிறோம்.

| வ. எண். | பெயர் | தந்தை பெயர் | முழு முகவரி | கையொப்பம் |
|---|---|---|---|---|
| 1. | குழுத்தலைவர் | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |

இடம் :

தேதி :

## இணைப்பு – 2

விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களின் பட்டியல்

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் (படிவம் I)

2. விண்ணப்பத்தில் ஒட்டப்படவேண்டிய புகைப்படங்களைத் தவிர்த்து, அண்மையில் எடுக்கப்பட்ட மூன்று வண்ண புகைப்படங்கள்.

3. இந்த திட்டத்தில் மானியம் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்ட மீன்பிடிக்கலனின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் (சான்று பெற்ற தகுதி வாய்ந்த / அங்கீகரிக்கப்பட்ட கடற்படை கட்டட வரைவாளர்).

4. ஆளறிச் சான்று (மீனவர் உயிரி தொழில்நுட்ப அடையாள அட்டையின் நகல் / உயரி தொழில்நுட்ப அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகல்).

5. குடும்ப அட்டை நகல்.

6. மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினருக்கான ஆவணத்தின் நகல்.

7. வங்கி கணக்குப் புத்தகத்தின் நகல் (மானியத் தொகை இருப்பு வைப்பதற்கான வங்கி கணக்கு).

8. வங்கி கடன் பெறும் பட்சத்தில், வங்கியில் கடன் வழங்குவதற்கான ஒப்புதல் கடிதம் அல்லது விண்ணப்பதாரரால் இணைப்பு –9 ல் உள்ள படிவம் VI ல் வழங்கப்படும் உறுதி மொழி.

9. விண்ணப்பதாரர்கள் குழுவாக இருப்பின் அங்கத்தினர்களின் தொழில் கூட்டு ஒப்பந்த பத்திரம் இணைக்கப்பட வேண்டும்.

பின்குறிப்பு: மேற்கண்ட ஆவணங்களின் நகல்கள் பதிவிதழ் பெற்ற அரசு அலுவலரால் சான்றொப்பம் பெற வேண்டும். மீன்பிடிக்கலனின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்களின்அசல் விண்ணப்பத்துடன் இணைத்து சமர்பிக்கப்பட வேண்டும்.

# இணைப்பு – 3

## ஒப்புகை

.........................மாவட்டத்தைச் சார்ந்த,

1)திரு............................................. 2) திரு ............................................... 3) திரு ...............................................
4) திரு .............................................................. 5) திரு ................................... 6) திரு ................................................ ஆகியோரிடமிருந்து, தூண்டில் மூலம் சூரை மீன் பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் மீன்பிடிக்கலன் கட்டுவதற்கு மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டத்திற்கான விண்ணப்பம் மீன்துறை இயக்குநர், தேனாம்பேட்டை, சென்னை–600006, அலுவலகத்தில்.............................................அன்று பெறப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பத்திற்கு வழங்கப்படும் பதிவெண்..............................................(எழுத்தால்) ஆகும்.

குறிப்பு: விண்ணப்பம் தொடர்பாக தகவல் பரிவர்த்தனைக்கு இந்த பதிவு எண்ணை உபயோகப்படுத்த வேண்டும்.

பெறுநர்கள்                  மீன்துறை இயக்குநருக்காக

1. திரு.
2. திரு
3. திரு.
4. திரு.
5. திரு.
6. திரு

அல்லது

.............................................. மீனவர் கூட்டுறவு சங்கம்

# இணைப்பு – 4

## படிவம் – II

## தூண்டில் மூலம் சூரை மீன் பிடிப்பிற்கு 50 விழுக்காடு மானியத்தில் புதிய மீன்பிடி கலன் கட்டும் திட்டம்

தூண்டில் மூலம் சூரை மீன் பிடிப்பதற்கு புதிய மீன்பிடி கலன் 50 விழுக்காடு மானியத்தில் கட்டும் திட்டத்திற்காக, தங்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம் பதிவு எண் ....................

பெயர் (1) (2) (3)

(4) (5) (6) – ல்

விண்ணப்பத்தில் கீழ்க்காணும் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

1)

2)

3)

4)

மேற்காணும் குறைகளை நிவர்த்தி செய்யத் தேவையான ஆவணங்களை இக்கடிதம் கிடைக்கப்பெற்ற பத்து நாட்களுக்குள் இக்கையொப்பம் இட்ட அலுவலரிடம் நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்புமாறு கோரப்படுகிறது. தவறும் பட்சத்தில் தங்களது விண்ணப்பத்தின் மூப்பு நிலையை (Seniority) தாங்கள் இழக்க நேரிடும்.

மேலும், தங்களது விண்ணப்பத்தில் குறை நிவர்த்தி செய்ய கோரப்பட்ட விவரங்கள் 30 நாட்களுக்குள் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லையெனில் தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்
மண்டல பரிசீலனை மற்றும்
கண்காணிப்புக்குழு

நகல்:

மீன்துறை இயக்குநர், மீன்துறை இயக்குநர் அலுவலகம்,
தேனாம்பேட்டை, சென்னை – 6.

## இணைப்பு – 5

படிவம் – III

(மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழுவின் ஆரம்ப நிலை விண்ணப்ப தேர்வின் போது நிரப்பப்பட வேண்டும். குழுவாக இருப்பின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனி தாள்களை பயன்படுத்த வேண்டும்.)

1. மீன்துறை இயக்குநர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட பதிவு எண். :

2. விண்ணப்பதாரரின் பெயர் :

3. தந்தை பெயர் :

4. வீட்டு முகவரி :

5. மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர் எண் பிரவேச புத்தகத்தின்படி உள்ளதா ? : ஆம் / இல்லை

6. விண்ணப்பதாரரால் வழங்கப்பட்ட தேசிய கடல் மீனவர் உயிர் புள்ளியல் தொழில் நுட்ப அடையாள அட்டை விவரம் சரியாகவுள்ளதா ? : ஆம் / இல்லை

7. அ. விண்ணப்பதாரர் சூரைமீன் பிடிப்பிற்கு விசைப்படகினை மாற்றியமைப்பதற்கோ / இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகினை சூரை மீன்பிடி தூண்டில் மரமாக மாற்றும் திட்டத்தில் துறைமூலம் / கடல் பொருள் ஏற்றுமதி ஆணையம் மூலம் மானியம் பெற்றுள்ளாரா ? : ஆம் / இல்லை

   ஆ. ஆம் எனில், விண்ணப்பதாரருக்கு மானியம் வழங்கப்பட்ட நாள் (தயவு செய்து ஆதாரம் இணைக்கவும்)

8. விண்ணப்பதாரர் தற்போது இருக்கும் மீன்பிடிக்கலனை புதிய சூரை தூண்டில் மீன்பிடி கலனாக மாற்ற விருப்பம் தெரிவித்துள்ளாரா ? : ஆம் / இல்லை

ஆம் எனில் தற்போதுள்ள மீன்பிடிக்கலன் தொடர்பான விவரம் வழங்கவும்.

அ) இணையதளம் மீன்பிடிக்கலன் பதிவு எண் :

ஆ) மீன்பிடி விசைப்படகு கட்டப்பட்ட
ஆண்டு / மீன்பிடிக்கலனின் வயது :

இ) இயந்திரம் எண். / மற்றும்
தயாரிப்பு நிறுவனம் :

ஈ) காப்பீட்டு விவரம் :

9. தொகை பெறப்பட்ட விவரம் : வங்கிக் கடன் / சொந்தப் பணம்

10. அ) வங்கிக் கடன் எனில் கடன் தொகை
வழங்கப்பட்ட விவரம் சரிபார்க்கப்பட வேண்டும் : ஆம் / இல்லை

ஆ) சொந்தப் பணம் எனில் விண்ணப்பதாரர்
இணைப்பு 9 படிவம் Vல் ஒப்புதல்
வழங்க வேண்டும் : ஆம் / இல்லை

கடல் முதல்வர் | மீன்துறை உதவி இயக்குநர்

கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி
ஆணையத்தின் பிரதிநிதி

தலைவர், மண்டல அளவிலான
கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு

(கையொப்பம் முழுப்பெயருடன் மற்றும் அலுவலக முத்திரை)

# இணைப்பு – 6

## படிவம் – IV

புதிய தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் மீன்பிடிக்கலன் 50 விழுக்காடு மானியத்தில் புதிய மீன்பிடிக்கலன் கட்டுவதற்கான பணி ஆணை.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| | திரு/ திருவாளர்கள் |
| மீன்துறை இயக்குநர் | 1. |
| நிர்வாக அலுவலகக் கட்டிடங்கள் | 2. |
| தேனாம்பேட்டை | 3. |
| சென்னை 600 006 | 4. |
| | 5. |

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.257, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன்1) துறை நாள் : 09.10.2013.
2. தங்கள் விண்ணப்பம் நாள்:
3. மாநில அளவிலான நிர்வாக குழுவின் பரிந்துரை நாள்:

-------

தூண்டில் மூலம் புதிய சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடிக்கலனை கட்டுவதற்கான தங்களது விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநிலஅளவிலான தொழில் நுட்ப குழு (SLTC) ஒப்புதல் அளித்த மீன்பிடிக் கலனின் வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எனவே தாங்கள் கீழேக் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் வரைமுறைகளின்படி மீன்பிடிக்கலன் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

i) புதியதாக தூண்டில் மூலம் சூரை மீன்பிடி / செவுள் வலை மீன்பிடிக்கலன் கட்டுவதற்கு செலவழிக்கப்பட்ட தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.30 இலட்ச ரூபாய் வரை இதில் எது குறைவோ, அது மானியமாக வழங்கப்படும்.

ii) பணி ஆணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் மீன்பிடிக்கலன் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஆரம்பிக்கப்படாவிட்டால் பணி ஆணை ரத்து செய்யப்படும்.

iii) ஒவ்வொரு அலகிற்கும் நிர்ணயிக்கப்படும் நியாயமான விலையை பொறுத்த வரை மாநில அளவிலான தொழில் நுட்ப குழுவின் (SLTC) முடிவே இறுதியானது.

iv) பணி முடித்த பின் புகைப்படம் மற்றும் அசல் ரசீதுகளை உள்ளடக்கிய தேவையான ஆவணங்களை தாங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

v) மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழு, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பணி நடக்கும் நேரத்திலும், பணி முடிவுற்ற பிறகும் ஆய்வுகள் மேற்கொள்ள உரிமை உண்டு.

vi) மானியத் தொகை மூன்று நிலைகளில் அளிக்கப்படும். அவை முறையே, **1.** மீன்பிடிக்கலனின் கூடு கட்டி முடிக்கப்பெற்ற நிலை. **2.** இயந்திரம் மற்றும் பிற உபகரணங்கள் வாங்கி பொருத்திய நிலை, **3.** மீன்பிடி வலைகள் வாங்கி மீன்பிடிக்கலன் பதிவு செய்யப்பட்ட நிலை.

vii) வழிகாட்டு நெறிமுறைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கால கெடுவிற்குள் பணியினை முடிக்க தங்களை அறிவுறுத்தப்படுகிறது.

viii) பணி ஆணை கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் மீன்பிடிக்கலனை கட்டிமுடிப்பதற்கு, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு ஒன்பது மாதங்களாகும். மீன்பிடிக்கலன் கட்டும் பணி மற்றும் உபகரணங்கள் வாங்கும் பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்கப்படவில்லையெனில் தகுதியான மானியத்தில் கீழ்க்கண்டவாறு அபராதத் தொகை பிடிக்கப்படும்.

◈ 10வது மாதம் – ரூ.50,000/–

◈ 11வது மாதம் – ரூ.1,00,000/–

◈ 12வது மாதம் – ரூ.2,00,000/–

மாநில அளவிலான நிர்வாக குழு மூலம் நிர்ணயிக்கப்பட்ட போதுமான கால கெடுவிற்குள் முழுமையான பணி முடிக்கப்படவில்லையெனில் முழுமையாக பணி பூர்த்தி செய்யப்படாத மீன்பிடிக்கலன் மீன்வளத்துறையின் சொத்தாக கையகப்படுத்தப்படும்.

ix) நிதி உதவியானது, பின்னீட்டு மானிய உதவியாக (Back ended subsidy) வழங்கப்படுவதோடு மூன்று கட்டங்களாக விடுவிக்கப்படும். இத்திட்டத்தின் பயனாளி துவக்கத்தில் தனது சொந்த முதலீட்டில் படகு கூட்டினை கட்ட வேண்டும். நிலைவாரியாக விடுவிக்கப்படும் மானிய விபரம் பின்வருமாறு.

| நிலை | பணிமுன்னேற்றம் | மானிய உதவி |
|---|---|---|
| நிலை – 1 | படகு கூட்டினை கட்டி முடித்தல் (construction of hull) | பயனாளியால் மேற்கொள்ளப் பட்ட செலவில் 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மட்டும். |
| நிலை – 2 | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்கி நிறுவுதல் பணி முடிவுற்ற நிலை. | பயனாளியால் மேற்கொள்ளப் பட்ட செலவில் 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மட்டும். |
| நிலை – 3 | செவுள் வலை மற்றும் ஆயிரங்கால் தூண்டில்களை உள்ளடக்கிய மீன்பிடி உபகரணங்களை வாங்குதல் மற்றும் படகினை மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழுவின் இறுதி அறிக்கையுடன் பதிவு செய்தல். | எஞ்சிய தகுதியுள்ள மானியத் தொகை. |

x) இந்த மீன்பிடிக் கலனில் பயன்படுத்தும் உபகரணங்களுக்கு, தாங்கள் மற்ற நிறுவனங்களிலிருந்து மானியம் பெற்றிருக்கவோ / விண்ணப்பித்திருக்கவோ கூடாது (நிறுவனம் : மாநில / மத்திய அரசு – MPEDA)

xi) தாங்கள் தவறான தகவல்களை வேண்டுமென்றே அளித்து மானிய உதவியை பெற்றிருப்பின், அதற்கு அபராதமாக வரிவிலக்களிக்கப்பட்ட எரியெண்ணெய் வழங்கப்படுவது நிறுத்தப்படுவது உள்ளிட்ட இதர நலத் திட்டங்களில் உதவி பெறுவதற்கான தகுதியினை இழக்க நேரிடுவதுடன், வருவாய் திரும்பபெறும் சட்டம் / பிறமுறைகளில் மானியத்தை திரும்ப பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அதே சமயத்தில் உரிய குற்றவியல் நடவடிக்கைகளும் துவங்கப்படும்.

xii) புதிதாக கட்டப்பட்ட மீன்பிடிக்கலனை இணையதளத்தில் பதிவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் பதிவு செய்யப்பட வேண்டும். மீன்வளத்துறை / கடல்சார் வாணிபத் துறையால் அவ்வப்போது தெரிவிக்கப்படும் குறிப்பிட்ட வர்ணப் பூச்சு பூச வேண்டும்.

xiii) கட்டுமானப் பணி முடிக்கப்பட்ட மீன்பிடி படகு பயனாளி மூலம் காப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். இத்திட்டத்தின் மூலம் மானிய உதவி பெற்று கட்டி முடிக்கப்பட்ட படகுகள் தூண்டில் சூரை மீன்பிடிப்பு / செவுள் வலை மீன்பிடிப்பிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இவை தவிர தூண்டில் மற்றும் ஒரு கயிறு தூண்டில் முறைகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

xiv) இத்திட்டத்தின் நிதியுதவியுடன் கட்டப்படும் சூரை மீன்பிடி கலன்கள், இழுவலை மூலம் மீன்பிடிப்பதற்கு கட்டாயமாக அனுமதிக்கப்பட மாட்டாது.

xv) மீன்துறை இத்திட்டத்தின் தாக்கத்தினை ஆராய்வதற்காக பயனாளி மீன்பிடிப்பு விவரங்களை மீன்துறை உதவி இயக்குநர் / தமிழ் நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்டம், 1983 ன்படி அங்கீகரிக்கப்பட்ட அலுவலரிடம் அதற்கான படிவத்தில் ஒவ்வொரு மீன் பிடிப்பு முடிவடையும் பொழுது அளிக்க வேண்டும்.

xvi) இத்திட்டத்தின் மூலம் பயனடையும் பயனாளிகள் தூண்டில்முறை சூரைமீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலனை குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்கு விற்பனை செய்யக்கூடாது.

xvii) பணி ஆணை பெற்ற 10 தினங்களுக்குள் தாங்கள் மீன்துறை இயக்குநருடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

மீன்துறை இயக்குநர்.

## இணைப்பு 7

### படிவம் – V

மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழுவின் பரிந்துரைகள்

| | |
|---|---|
| 1. திரு. | த/பெ. |
| 2. | த/பெ. |
| 3. | த/பெ. |
| 4. | த/பெ. |
| 5. | த/பெ. |
| 6. | த/பெ. |

நிரந்தரமாக வசிக்குமிடம்

| | | |
|---|---|---|
| 1. | 2. | |
| 3. | 4. | |
| 5. | 6. | (முழு விலாசம்) முறையே |

50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு புதிய சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலையுடன் கூடிய படகு குழுவாக/ தனியாக கட்டுவதற்கு............................ அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்பு குழு ........................ கீழ்க்காணும் கட்டுமான பணியின் முன்னேற்ற நிலைகள் மற்றும் நாட்களில் ஆய்வு செய்தது.

படகு கூடு கட்டுதல் (Hull construction)/

படகிற்கான இயந்திரங்கள் கொள்முதல் மற்றும் இயந்திரம் / விசைப்பொறி / தளவாடம் நிறுவுதல்/

மீன்பிடி வலைகள் கொள்முதல்.

தூண்டில் முறை சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை மீன்பிடிக்கலன் மாநில அளவிலான தொழில்நுட்பக் குழுவால் ஒப்புதலளிக்கப்பட்ட வரைப்படம் மற்றும் விவர குறிப்புகளின்படி கட்டப்பட்டுள்ளதென சான்றளிக்கப்படுகிறது.

மேலும், இதன் பாகங்கள் தரம் வாய்ந்ததென சான்றளிக்கப்படுகிறது. மானிய திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட பாகங்கள் புதியன என்றும் பழைய பொருட்கள் இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற பயன்படுத்தப்படவில்லை எனவும் உறுதியாய் அறியப்பட்டன.

மாநில அளவிலான தொழில்நுட்பக் குழுவால் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டாயமாக்கப்பட்ட அமைப்புகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | கட்டாயமாக்கப்பட்ட அமைப்புகள் | விவர குறிப்பு | மொத்த பட்டியல் / செலவு சீட்டுகள் மொத்தத் தொகை (ரூ,) | தகுதியான மானிய தொகை (ரூ,) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | கூடுதல் | |

எனவே திரு........................................................., த/பெ. ........................................................... இவரின் வங்கி கணக்கு எண். ..........................................., வங்கி கிளை குறியீடு .............................................................ஐ.எப்.எஸ். குறியீடு எண். ................................... ல் மானிய தொகை ரூ...................(ரூபாய் .............................................................மட்டும்) மானியமாக விடுவித்திட மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு (RSMC) பரிந்துரைக்கிறது.

கடல் முதல்வர்

மீன்துறை உதவி இயக்குநர்

கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணைய பிரதிநிதி

மீன்வள பல்கலை கழக பிரதிநிதி

தலைவர், மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு

முழுப் பெயர், கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை

# இணைப்பு 8

**மானியம் விடுவித்தலுக்கான சரிபார்ப்பு பட்டியல்**

1) கட்டிமுடிக்கப்பட்ட மீன்பிடிக்கலனை மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழு ஆய்வு செய்த கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பு.

2) பணி ஆணையின்படி முடிவடைந்த பணிகள் மற்றும் பாகங்களின் தரம் குறித்து மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழுவால் அளிக்கப்பட்ட சான்று.

3) நியாயமான தகுதியான மானியத் தொகை குறித்த மண்டல அளவிலான கூர்ந்தாய்வு மற்றும் கண்காணிப்புக் குழுவின் பரிந்துரை.

4) பொருள் விவரப்பட்டியல் மற்றும் பட்டியல்கள் அசலாக.

5) கட்டுமான நிலை வாரியான தரம் வாய்ந்த புகைப்பட நகல்கள்( ஒவ்வொரு அலகிற்கும் தனி ஒரு ஆல்பம்).

6) பயனாளியின் விண்ணப்ப நகல்

7) பணி ஆணையின் நகல்.

**கட்டுமானப் பணிகளின் நிலை.**

i) மீன்பிடிக்கலனின் கூடு (Hull) கட்டுதல்.

ii) மீன்பிடிக்கலன் இயந்திரங்கள் கொள்முதல் மற்றும் இயந்திரம் / உபகரணங்கள்/ தளவாடம் நிறுவுதல்.

iii) மீன்பிடி வலைகள் கொள்முதல் மற்றும் கலனை பதிவு செய்தல்

# இணைப்பு – 9

## படிவம் VI

## உறுதிமொழி

.............................................................. மாவட்டம், ............................................................................ வசிக்கும்

நான், தமிழ்நாடு அரசு, மீன்வளத்துறை மூலம் 50 விழுக்காடு மானிய உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமான, தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுல்வளை பயன்படுத்துவதற்கான புதிய மீன்பிடி கலன் கட்டுவதற்கு விண்ணப்பித்துள்ளேன்.

நான் எனது சொந்தப் பணத்தின் மூலம் இந்த புதிய மீன்பிடி கலனை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கட்டி முடிப்பேன் என உறுதி அளிக்கிறேன். மேலும், மத்திய மாநில அரசுகள், மானிய உதவி வழங்கும் இது போன்ற திட்டங்கள் எதனிலும், இத்திட்டத்தின் கீழ் கட்டவிருக்கும் கட்டமைப்புகள், உபகரணங்கள் எதுவிற்கும் நான் மானிய உதவி பெறவில்லை எனவும் உறுதி அளிக்கிறேன். இது தொடர்பாக மீன்வளத்துறையின் அதிகாரம் பெற்ற அலுவலர்களால் ஏதேனும் சட்டப்பூர்வமான நடவடிக்கை தொடரப்படுமேயானால் அதற்கும் பொறுப்பேற்கிறேன் எனவும் உறுதி அளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் பெயர்

நாள்:

இடம்:

# இணைப்பு இ

## தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

| வ. எண். | நிவாரணம் அல்லது உதவி | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | விபத்து தீர்வழி (நிவாரணம்) | |
| | (அ) விபத்தினால் மரணம் | 1,00,000 |
| | (ஆ) இரண்டு கைகள் இழப்பு | 1,00,000 |
| | (இ) இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 |
| | (ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| | (உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 |
| | (ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| | (எ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | 20,000 |
| 2. | மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது அதற்குப் பின்பு உடனடியாக (விபத்தின் காரணமாக அல்லாமல்) | 1,00,000 |
| 3. | மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் | 1,00,000 |
| 4. | இயற்கை மரணம் | 15,000 |
| 5. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |

| 6. | உறுப்பினர்களின் மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கிபடிப்பவர்கள் | |
|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | a) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | -- | -- |
| | b) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | -- | -- |
| | c) தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற் நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டு ஒன்றிற்கு) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | d) இளங்கலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |

| 6. உறுப்பினர்களின் மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கிபடிப்பவர்கள் | |
|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| e) முதுகலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| f) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் இளங்கலை (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| g) முதுகலை தொழிற் கல்விகள் (ஆண்டு ஒன்றிற்கு) | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 7. திருமண உதவி | | | ஆண் | பெண் |
| அ) உறுப்பினரின் திருமண உதவி | | | 3,000 | 3,000 |
| ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம் | | | 5,000 | 5,000 |
| 8. மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித் தொகை | | | | |
| i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் ஆறு மாதங்கள்) | | | 6,000 | |
| ii) கருச்சிதைவு | | | 3,000 | |
| iii) கருக்கலைப்பு | | | 3,000 | |
| 9. முதியோர் ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | | | 400 | |